GOKULAM

கோகுலம்

ரூ.6/-

மே 2004

விடுமுறைச் சிறப்பிதழ்




"செஞ்சிக் கோட்டையைப் பார்க்க வாருங்கள்!"

விழுப்புரம் மாவட்ட ஸ்பெஷல்

SEMAS

All Brain Development Courses in an Umbrella



We are @ Adambakkam - 55392460, Madipakkam - 22530670, Saligramam - 23760810, Chromepet - 22412544, K.K.Nagar - 24722505, Mogapair - 26259155, Nanganallur - 56149000, Velachery - 22530243, Ullagaram - 22422964, Periyar Nagar - 56142836, T. Nagar - 24358560, Ambuttur-26571002, Sowcarpet - 56172470, Guindy-32599982, Kodambakkam-24731526, Purasaiwakkam-31142983, Adayar - Indiranagar-56151717, Kovilpatty-04632226349, Thiruchengodu-283553, Kalpakkam-286036, Kancheepuram-233324, Rasipuram-2251379, Salem Ammapet-2268854, Fairlands-2268854, Namakkal Mohanur Road - 220471, Dindugal - 9443108595, Erode - Kalukadimedu-2263820, Pudukottai - 266171, Hosur - 221934, Thirupur-22155177, Pallipalayam - 9843340557, Karur - 9594030471, Trichy-Contonment - 24100012, BHEL, HAPP-443112597, Pondichery-2212988, Area Managers: Madurai-2584441, Sivagangai- 227030, Vellore - 9443188645, Thiruvallur-9841330330, Coimbatore - 3121372, Hyderabad - 9849882618, Mumbai - 9820428997, Bangalore -080-23649877

SEMAS Pvt. Ltd.

545, 14th St., 4th Sector, K.K.Nagar, Chennai-78 Ph. 247 22505/22550, 30904139
www.semasindia.com, info@semasindia.com

Offers Area, Master & Overseas Franchisees

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர்
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
ஆறு மாதம் : ரூ.36/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்









மே 2004 மலர் : 22 இதழ் : 4

கோகுலம்


உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்

நட்சத்திர விளையாட்டு

கலர் பென்சில்கள் அல்லது ஸ்கெட்ச் பேனாக்களை எடுத்துக் கொள்ளுங்கள். கீழே கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு வண்ணப் பென்சிலால் வட்டமிடுங்கள்.


நட்சத்திரக் கேள்விகள்

1. பெரிய 8 முனை நட்சத்திரத்தை சிவப்பு நிறத்தால் வட்டமிடுங்கள்.
2. 8 முனை நட்சத்திரங்கள் எத்தனை உள்ளன?
3. சிறிய 5 முனை நட்சத்திரத்தை மஞ்சள் நிறத்தால் வட்டமிடுங்கள்.
4. 5 முனை நட்சத்திரங்கள் எத்தனை உள்ளன?
5. பெரிய 12 முனை நட்சத்திரத்தை இளம் பச்சை நிறத்தில் வட்டமிடுங்கள்.
6. எத்தனை 12 முனை நட்சத்திரங்கள் உள்ளன?
7. சிறிய 6 முனை நட்சத்திரத்தை பச்சை நிறத்தால் வட்டமிடுங்கள்.
8. எத்தனை 6 முனை நட்சத்திரங்கள் உள்ளன?
9. பெரிய நட்சத்திரக் கூட்டத்தை நீல நிறத்தில் வட்டமிடுங்கள்.
10. நட்சத்திரக் கூட்டங்கள் எத்தனை உள்ளன?
11. பிரௌன் வண்ணத்தால் சிறிய 8 முனை நட்சத்திரத்தை வட்டமிடுங்கள்.
12. எந்த இரண்டு 8 முனை நட்சத்திரங்கள் ஒரே அளவில் உள்ளன? சிவப்பு நிறத்தால் வட்டமிடுங்கள்.
13. பெரிய 5 முனை நட்சத்திரத்தை ரோஸ் வண்ணத்தில் வட்டமிடவும்.
14. எந்த இரண்டு 5 முனை நட்சத்திரங்கள் ஒரே மாதிரி உள்ளன? மஞ்சள் நிறத்தில் வட்டமிடுங்கள்.
15. சிறிய 12 முனை நட்சத்திரத்தை ஆரஞ்சு வண்ணத்தால் வட்டமிடுங்கள்.
16. எந்த 12 முனை நட்சத்திரம் வித்தியாசமாக உள்ளது? நீல நிறத்தில் வட்டமிடுங்கள்.
17. பெரிய 6 முனை நட்சத்திரத்தை பச்சை நிறத்தால் வட்டமிடுங்கள்.
18. வித்தியாசமாக உள்ள 6 முனை நட்சத்திரத்தை இளம் பச்சை நிறத்தில் வட்டமிடுங்கள்.
19. சிறிய நட்சத்திரக் கூட்டத்தை ரோஸ் வண்ணத்தில் வட்டமிடுங்கள்.
20. எந்த 2 நட்சத்திரக் கூட்டங்கள் ஒரே மாதிரி உள்ளன? பிரௌன் நிறத்தில் வட்டமிடுங்கள்.




"எங்கே, சொல் பார்க்கலாம் இந்தப் பழமொழியை... 'உப்பில்லாப் பண்டம்...'"
"பத்தியக்காரர்களுக்கே!"
"?!?!?!"


- அனுராதா ராஜப்பா,
வத்தலகுண்டு




8 முனை நட்சத்திரம்




நட்சத்திரக் கூட்டம்




12 முனை நட்சத்திரம்



5 முனை நட்சத்திரம்



6 முனை நட்சத்திரம்



''கோடைக்காலம் எதுன்னு சொல்லு?''

''மழை பெய்யற ஒண்ணு ரெண்டு நாட்கள் தவிர, மற்ற நாட்கள் எல்லாம் கோடைக் காலம்தான் சார்!''

- கு. அருணாசலம்,
தென்காசி





சூரியனைத்



அந்தக் காட்டிலுள்ள விலங்குகள் கூட்டமாகக் கூடி, சூரியனைத் தேடிச் சென்றன. அவை வாழ்ந்த அந்த வனத்தில் அடர்ந்த மரங்கள் நிறைந்து இருந்த படியால், எப்போது பார்த்தாலும் இருட்டாகவே இருந்தது.

அங்கு வாழும் விலங்குகளும் பறவைகளும் சூரிய ஒளியைக் கண்டதே இல்லை. வெகுதூரம் நடந்து ஒருவழியாக சூரியனைக் கண்டுபிடித்த அவை,

"உலகைச் சுற்றும் சூரியனே!
உருவில் மிகவும்
பெரியவனே!
பகலில் நீ தரும்
ஒளியைத்தான்
பார்த்தே அறியா
பேதைகள் நாங்கள்
இருட்டில் கிடந்து
நாங்களும்தான்
இன்னல் மிகவும்
படுகின்றோம்.
மரங்களைத்
துளைத்து நீ வந்தால்
மலர்ந்திடும் எங்கள்
வாழ்வங்கு
ஆதவனே நீயும்
வருவாயா?
அன்புடன் ஒளியைத் தருவாயா?"

என்று தங்களது மனக்குறையைச் சூரியனிடம் தெரிவித்தன.

விலங்குகளின் ஏக்கம் கலந்த குரலைக் கேட்டு மனமிரங்கிய சூரியனும்,

"அடர்ந்த வனத்தின் இருட்டுக்குள்
அடைந்து கிடக்கும் விலங்குகளே
இடர்களை நீக்கி தருவதற்கு
இன்றே அங்கு நான் வருவேன்"

என கூறிவிட்டு, அவற்றுடன் காட்டிற்குள் நடக்கலானது.


தினசரி சூரியன் காட்டுக்குள் நடந்து சென்று ஒளியைத் தருவதும், அதனைக் கண்டு விலங்குகள் தூங்கி எழுந்து உழைக்கச் செல்வதும் வாடிக்கையாகி விட்டது.



நாளாக நாளாக கொண்டைச் சேவல் மண்டையழகன், கோமளவல்லி குண்டுமல்லி, ஆலங்காட்டு ஆந்தையண்ணன், சோர்வே இல்லா சுந்தரி சூரியகாந்தி ஆகிய நான்கு பேரும் சூரியனுக்கு நண்பர்

தேடும் சேவல்!

பா.முருகேசன்



களானார்கள்.

ஒருநாள் ஆலங்காட்டு ஆந்தையண்ணன் தன் நண்பர்களிடம், "மனிதர்கள் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடுவது போல நாம் விளையாடலாமா?" என்று கேட்டது.

நண்பர்களும் ஒப்புக் கொண்டனர்.

சூரியன் தானே முன்வந்து, "எனக்குக் கட்டி விடுங்கள்" என்றது.

அதன்படி சூரியனின் கண்ணை ஆலங்காட்டு ஆந்தையண்ணன் கட்டி விட, மற்றவர்கள் தங்களுக்குப் பிடித்தமான இடத்தில் தனித் தனியாக ஒளிந்து கொண்டனர்.

கொண்டைச் சேவல் மண்டையழகன் காட்டில் கோவேறுக் கழுதையின் கூடை ஒன்றினுள் ஒளிந்து கொண்டது.


கோமளவல்லி குண்டுமல்லி இலைகளுக்கிடையே தன்னை மறைத்துக் கொண்டது.

ஆலங்காட்டு ஆந்தையண்ணன் மரப் பொந்துக்குள் ஒளிந்து கொண்டது.

சோர்வே இல்லா சுந்தரி சூரிய காந்தி தான் ஒளிந்து கொள்ள நல்ல இடம் கிடைக்காததால் 'பேந்தப் பேந்த' விழித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள்.

கண்களைக் கட்டியபடி வந்த சூரியனும் 'திரு திரு'வென விழித்துக் கொண்டிருந்த சுந்தரி சூரியகாந்தியைப் பிடித்து விட்டான். சூரியகாந்தி பிடிபட்டதும் சந்தோஷத்துடன் தன் நண்பர்களை அழைக்க, சூரியனின் குரலைக் கேட்ட மற்ற நண்பர்கள் தாங்கள் ஒளிந்திருந்த இடத்தை விட்டு வெளியே வந்தனர். அவர்களிடம் சூரியன்,

"சூரியன் எந்தன் கைகளிலே
சூரியகாந்தி சிக்கிவிட்டாள்
கறுப்புத் துணியிதனைத்தான் அவள்
கண்களில் கட்டிட நண்பர்களே
விருட்டென சென்று ஒளியுங்கள்



விரைந்தே, நானும் ஒளிந்து
கொள்வேன்!''

என்று கூறியது.


கண்கள் கட்டப்பட்ட சூரியகாந்தி தான் இருக்கும் இடத்திலிருந்தே மல்லிகைப் பூவின் வாசம் வருகிறதா? என சோதனை செய்தது. சிறிது வாசம் வரவே அதை நுகர்ந்துகொண்டே சென்ற சூரியகாந்தி, இலை மறைவிலிருந்த மல்லிகையைத் தன் கைகளால் பிடித்துவிட்டது.

''வாசம் கொண்ட மல்லிகையே
வசமாய் என்னிடம் சிக்கிவிட்டாய்
நேசம் கொண்ட நண்பர்களே!
விரைந்தே இவ்விடம் வாருங்கள்''

என்று தன் நண்பர்களை அழைத்தது சோர்வே இல்லா சுந்தரி சூரியகாந்தி.

சூரியகாந்தியின் குரலைக் கேட்டு வெளியே வந்த நண்பர்கள், கோமளவல்லி குண்டுமல்லியின் கண்களைக் கட்டி விட்டு மீண்டும் ஒளிந்துகொண்டனர்.

திசை தெரியாமல் அங்குமிங்குமாக அலைந்து கொண்டிருந்த குண்டுமல்லி கோமளவல்லியை அந்தப் பக்கமாக வந்த பொன்வண்டு பொன்னப்பன் கண்டது. கோமளவல்லி மீது இரக்கம் கொண்ட பொன் னப்பன் பொன்வண்டு அதனைத் தன்



கைகளால் பிடித்து மெல்ல ஆலங்காட்டு ஆந்தையண்ணன் ஒளிந்திருந்த மரப் பொந்தினுள் விட்டுச் சென்றது.

மரப்பொந்தினுள் ஆலங்காட்டு ஆந்தை யண்ணன் தூங்கிக் கொண்டு இருந்த படியால், வெளியே நடந்ததைக் கவனிக்க வில்லை.

குண்டுமல்லி கோமளவல்லி, ஆலங் காட்டு ஆந்தையண்ணனை கைபிடித்து இழுத்தது. தான் அகப்பட்டுக் கொண்டதை அறிந்து திடுக்கிட்டு எழுந்த ஆந்தை யண்ணன் 'திருதிரு'வென விழித்தவாறு பொந்தை விட்டு வெளியே வந்தது.

''அகப்பட்டுக் கொண்டான்
ஆந்தையவன்
ஆடிப்பாடுவேன் நானுந்தான், அங்கே
சுகமாய்த் தூங்கிய அவனைத்தான்
சுற்றிப் பிடித்தேன் நானுந்தான்''

என்று குதித்தபடி ஆடிப் பாடியது குண்டுமல்லி கோமளவல்லி.

கோமளவல்லியின் குரலைக் கேட்ட நண்பர்கள் வெளியே வந்து, ஆலங்காட்டு ஆந்தையண்ணனின் கண்களைக் கட்டி விட்டு, மீண்டும் ஒளிந்து கொண்டனர்.

என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்த ஆலங்காட்டு ஆந்தையண்ணனுக்கு சோம்பல் முறித்து 'படபட'வென இறக்கைகளை அடித்துக் கொண்டிருந்த சத்தம் கேட்டது. சத்தம் கேட்ட திசையை நோக்கி நகர்ந்த ஆந்தை யண்ணன், அங்கு நின்று கொண்டிருந்த கொண்டைச் சேவல் மண்டையழகனைப் பிடித்து விட்டது. பின்னர் நண்பர்கள் கூடி சேவலின் கண்ணைக் கட்டிவிட்டு சென்று விட்டனர்.

சூரியகாந்தி வாசத்தை வைத்து மல்லிகையைக் கண்டுபிடித்ததையும், மல்லிகைக்குப் பொன்வண்டு ஆலங் காட்டு ஆந்தையண்ணனைக் கண்டு பிடிக்க உதவி செய்ததையும், ஆலங் காட்டு ஆந்தையண்ணன் சோம்பல் முறித்துக் கொண்டிருந்த சத்தம் கேட்டு சேவலைக் கண்டுபிடித்த தையும் கண்டு கொண்டிருந்த சூரி யனுக்கு கோபம் வந்தது. அழுகுண்ணி ஆட்டம் ஆடும் இவர்களுடன் இனி சேரக் கூடாது என தனக்குள்ளாக எண்ணிக் கொண்டு, தூரமாக இருந்த மலைக்குப் பின்னால் சென்று மறைந்து கொண்டது.

மல்லிகைப் பூவோ வழக்கம் போல் செடி களுக்குள் மறைந்து கொண்டது. ஆலங் காட்டு ஆந்தையண்ணனோ மரப்

பொந்தினுள் நுழைந்து தூங்கிப் போனது. சோர்வே இல்லா சுந்தரி சூரியகாந்தி கோபத்துடன் சென்ற சூரியன் எங்கு சென்றுவிட்டது என சூரியனை வேடிக்கைப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தது. சிறிது நேரம் சென்றதும், சூரியகாந்தி சேவலின் கண்கட்டை அவிழ்த்து விட்டு, சூரியன் கோபத்துடன் சென்ற கதையைக் கூறியதும், சேவல் சூரியனைக் காண புறப்பட்டது.

வெகுதூரம் தேடி அலைந்த கொண்டைச்சேவல் மண்டையழகனால் சூரியனைக் காண இயலவில்லை. சூரியன் மறைந்துவிட்டபடியால், இருள் பரவ ஆரம்பித்திருந்தது. அப்போது அவ்வழியே ஒரு மின்மினிப்பூச்சி 'மினுக் மினுக்' என ஒளிவீசிப் பறந்து வந்து கொண்டிருந்ததை அது கண்டது. உடனே,

''மின்னிச் செல்லும் கண்ணம்மா - உன்
மின்னொளி ரொம்ப அழகம்மா
ஒளிந்த இடத்தை அறிவாயா?
உனக்குத் தெரிந்ததை எனக்குச் சொல்வாயா?''

என்று கேட்டது. சேவலின் குரலைக் கேட்ட மின்மினியும் சேவலுக்குப் பதில் கூறியது.


''குறையா ஒளியுள்ள சூரியனும்
கோபத்தால் சிவந்து சென்றானே!
மறைவாய் அந்த மலைக்குள்ளே
மறைந்து நின்று கொண்டானே!
வெறித்துப் பார்த்த சூரியனும்
விரைந்தே சென்றது கோபத்தில்
உரக்க குரலினை எழுப்பிப்பார்
உடனே அவனும் வந்திடலாம்''

என்று சூரியனின் கோபத்திற்கான காரணத்தைத் தெளிவாகக் கூறிவிட்டு சென்றுவிட்டது மின்மினி.

பாவம் சேவல் விடிய விடிய சூரியனைத் தேடி அலைந்தது. காலைப் பொழுது நடந்த நிகழ்ச்சியின் கோபத்தால் முகம் சிவந்த சூரியன், மெல்ல மெல்ல கிழக்குப் பக்கமாக தன் தலையை நீட்டியது.

அதைக் கண்ட சேவலும் சந்தோஷத்தில் கத்த ஆரம்பித்தது...

''கொக்கரக்கோ நண்பர்களே
கொண்டு வந்தேன் சூரியனை
கொக்கரக்கோ அவன் கோபம்
குறைய வில்லை இன்னும்தான்
பக்குவமாய் நாம் இணைந்து
பதமாய் அவனிடம் பேசிடுவோம்




கோபம் தீர்ந்த சூரியனைக்
கூட்டி வருவோம் வனத்திற்குள்''

என்று கத்தியது. அதுவரை சோகத்துடன் இருந்த சோர்வே இல்லாத சுந்தரி சூரியகாந்தி, தலை நிமிர்ந்து தன் சோகம் மறந்து சிரித்தபடி சூரியனை வரவேற்றது.

பொன்வண்டு பொன்னப்பன் உதவியால் தான் ஆலங்காட்டு ஆந்தையண்ணனைக் கண்டுபிடித்தது தெரிந்து விட்டதால், குண்டு மல்லி வெளியே வர வெட்கப்பட்டு இலைகளுக்குள் மறைந்து கொண்டது. சூரிய ஒளி முற்றிலும் மறைந்து விட்ட பின்பு தான் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருக்கிறது.

மரப் பொந்தினுள் ஒளிந்து தூங்க ஆரம்பித்த ஆலங்காட்டு ஆந்தையண்ணனும் பகலில் நன்றாகத் தூங்கி விட்டு, இரவில் வெளியே வந்து தன் நண்பர்களைத் தேடி அலைகிறது.

சேவல் மட்டும் தினசரி சூரியனைக் கண்டதும் கூவி வரவேற்பதைப் பழக்கமாக்கிக் கொண்டது. சோர்வே இல்லா சுந்தரி சூரியகாந்தி சூரியனைச் சமாதானப்படுத்த இன்றுவரை முயற்சி செய்து கொண்டேயிருக்கிறது. சூரியன் அன்று சென்றவன் அதன் பிறகு பூமிக்கு வரவேயில்லை.



பறக்கும் வாத்துகள்!



செய்து பாருங்கள்

இந்தப் பக்கத்தை சற்று தடிமனான அட்டையில் ஒட்டுங்கள். பிறகு வாத்துகளைக் கவனமாக வெட்டி தனித்தனியாக வைத்துக் கொள்ளுங்கள். மேகத்தைத் தனித் தனியாக வெட்டி, ஒன்றுக்குள் ஒன்று சொருகி விடுங்கள். மேகத்தின் நான்கு முனை களிலும் நூலால் ஒவ்வொரு வாத்தையும் கட்டி விடுங்கள். இவற்றை வீட்டின் வரவேற் பறையின் மேல் கட்டித் தொங்க விடுங்கள். காற்றில் அசையும் போது அழகாக இருக்கும்!

பத்து வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்!







விடை: 1. பூனை மீசை 2. பூனை நெற்றி 3. பூனை புருவம் 4. எலியின் கண்ணாடி 5. எலியின் துண்டு 6. புகை. 7. பல்பு 8. ரிமோட் பட்டன் 9. ஒலி அலை 10. எலியின் வாய்

பூதம் கொடுத்த வேலை!

கதை : டி.அய்யாசாமி, அரூர்   படம் : பிள்ளை




ஒரு வாரத்தில் பூதம் சற்று குண்டானது.
அடுத்து உன் தம்பிகளைச் சந்தோஷப் படுத்து.
அன்றிலிருந்து ஷீலா தம்பிகளுடன் சண்டையிடுவதில்லை. அவர்களுக்குப் படிக்கவும், விளையாடவும் உதவி செய்தாள்.
பூதம் இன்னும் குண்டானது.
அடுத்து நேரத்தைச் சரியாகப் பயன்படுத்து.
ஷீலா ஓய்வு நேரத்தில் நிறைய படித்தாள், எழுதினாள், வரைந்தாள். பூதம் முழுவதுமாகத் தேறியது.
ஷீலா, சொல் உனக்கு என்ன வேண்டும்?
உழைப்பு, அன்பு, நேரத்தை எப்படி பயன்படுத்துறதுங்கற வாழ்க்கைப் பாடம் உன்னால கத்துக்கிட்டேன். இதைத் தவிர வேறு எதுவும் சந்தோஷம் தராது. நீ போகலாம்.
பூதம் மகிழ்ச்சியுடன் உடனே மறைந்தது.



எழில் கொஞ்சும் இரட்டை நகரங்கள்!

சுற்றுலா

இந்த வருடம் விடுமுறைக்கு எங்கே போகலாம் என்று யோசனை செய்து கொண்டிருக்கிறீர்களா? கவலை வேண்டாம். தமிழ் நாட்டின் அண்டை மாநிலமான ஆந்திராவின் தலைநகர் ஹைதராபாத் நகருக்கு வாருங்கள். வரலாற்றுச் சின்னங்களும், அறிவியல் வளர்ச்சியும் ஒருங்கே நிறைந்துள்ள நகரம் ஹைதராபாத்.

400 வருட பழைமை வாய்ந்த இந்நகரம் புராதன அழகு கொண்டது. ஹைதராபாத்தின் வரலாறு 1512ஆம் ஆண்டில் குத் ஷா சாம்ராஜ்யத்திலிருந்து தொடங்குகிறது. ஐந்தாம் குத் ஷா தான் சார்மினார் நகரத்தை உருவாக்கினார்.

ஹைதராபாத்தின் வளமும், கோல்கொண்டா கோட்டை அமைப்பும் ஔரங்கசீப்பைக் கவர்ந்தது. இதன் விளைவாக 1687ஆம் ஆண்டு ஹைதராபாத்தைக் கைப்பற்றி ஔரங்கசீப் ஆட்சி செய்யத் துவங்கினார். முகலாய ஆட்சிக்குப் பின் நிஜாம் ஆட்சி ஏற்பட்டது. 1798ஆம் ஆண்டு நிஜாமுக்கும் பிரிட்டிஷ்காரர்களுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி செகந்திராபாத் என்ற பகுதியை நிஜாம் ஆட்சி செய்தார். ஆனால் இன்று ஹைதராபாத்தும் செகந்திராபாத்தும் முழுவளர்ச்சியடைந்து 'இரட்டை நகரங்கள்' என்று அழைக்கப்படுகின்றன.

'பழைய நகரம்' என்று இன்றும் அழைக்கப்படும் சார்மினாரில் கம்பீரமாக நின்று கொண்டிருக்கிறது குலி குதுப் ஷா அமைத்துள்ள மாளிகை. 1591ஆம் ஆண்டு இம்மாளிகை கட்டப்பட்டது. இதனைச் சுற்றிலும் உலகப் புகழ்பெற்ற முத்து மற்றும் ஆபரணக் கடைகள் நிறைந்துள்ளன. இங்கு உருவாக்கும் கண்ணாடி வளையல்கள் மிகவும் பிரசித்தம். நிறையப் பணத்துடன்



• கோல்கொண்டா கோட்டை

• ஹுசேன் சாகர் ஏரி



வந்தீர்கள் என்றால் அருமையான ஆபரணங்களை அள்ளிச் செல்லலாம்!

13ஆம் நூற்றாண்டில் காகதீயர்களால் கண்டுபிடிக்கப்பட்டது கோல்கொண்டா கோட்டை. அதன் பின் குதுப்ஷா இக்கோட்டையை விரிவாக்கினார். இந்தக் கோட்டையைச் சுற்றிப் பார்க்கவே அரை நாள் வேண்டும்.


அடுத்தது சாலர்ஜங் மியூசியம். இந்த அருங்காட்சியகம் ஆசியாவிலேயே மிகவும் புகழ் வாய்ந்தது. மூன்றாம் நவாப் சாலர்ஜங் சேகரித்து வைத்துள்ள கலை பொருட்கள் இங்குள்ளன. அதுமட்டுமின்றி விலை மதிப்பற்ற ஐரோப்பிய, இந்திய ஓவியங்களும், சிலைகளும் உள்ளன. ஔரங்கசீப், திப்புசுல்தான், ஷாஜஹான் போன்ற மன்னர்களின் பொருள்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.



நம் எல்லோர் மனதையும் கொள்ளை கொள்ளக் கூடிய இடம் என்றால் அது ஹுசேன் சாகர் ஏரிதான்! இந்த ஏரிக்கு மாலை வேளையில் வந்தால் குளிர்ந்த காற்றும், படகுச் சவாரியும் அருமையாக இருக்கும். இந்த ஏரியின் நடுவில் பிரம்மாண்டமான புத்தர் சிலை ஒன்று உள்ளது. இங்கு குறிப்பிட்ட காலங்களில் படகுப் போட்டிகளும், நீர் விளையாட்டுகளும் நடத்தப்படுகின்றன. ஏரிக்கு அருகில் உள்ள பூங்கா எங்களுக்குப் பொழுது போக்கும் முக்கிய இடம்.

அவசியம் வாருங்கள்!

• சாலர்ஜங் அருங்காட்சியகம்



ஆசியாவிலேயே மிகவும் புகழ் வாய்ந்தது சாலர்ஜங் மியூசியம். மூன்றாம் நவாப் சாலர்ஜங் சேகரித்து வைத்துள்ள கலை பொருட்கள் இங்குள்ளன. அதுமட்டுமின்றி விலைமதிப்பற்ற ஐரோப்பிய - இந்திய ஓவியங்களும், சிலைகளும் உள்ளன.



• சார்மினார்

விலையுயர்ந்த புத்தர் சிலை!

செய்தி நேரம்

இங்கிலாந்து நாட்டில் உள்ள பிரிட்டிஷ் அருங்காட்சியகம், விக்டோரியா மற்றும் ஆல்பர்ட் அருங்காட்சியகம் ஆகியவை இணைந்து 7 கோடி ரூபாய்க்குப் புத்தர் சிலை ஒன்றை வாங்கியுள்ளன. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த பழம் பெருமை வாய்ந்த, அழகிய வேலைப்பாடுகளைக் கொண்டது இந்த அரிய புத்தர் சிலை. இது 14 அங்குல உயரமுள்ளது. இந்தச் செப்புச் சிலை குப்தர் காலத்தைச் சேர்ந்தது. ஐரோப்பாவைச் சேர்ந்த அருங்கலைப் பொருள் சேகரிப்பவரிடமிருந்து இச்சிலையை வாங்கியுள்ளனர். இந்த அருங்காட்சியகங்களில் மாறி, மாறி இச்சிலை வைக்கப்படும்.

களவு போன நோபல் பரிசு!


வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூருக்குக் கிடைத்த நோபல் பரிசு சாந்தி நிகேதன் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்தது. விஸ்வபாரதி பல்கலைக் கழகம் விடுமுறைக்குப் பின் திறக்கப்பட்ட போது நோபல் பரிசு களவு போனது தெரிய வந்தது. பதக்கத்துடன் தாகூரின் கைக் கடியாரம், கைவளை ஆகியவையும் காணவில்லை.

27 இந்திய நிறுவனங்கள்!

உலகின் மிகப் பெரிய 2000 தொழில் நிறுவனங்கள் பட்டியலை ஃபோர்பஸ் என்ற பத்திரிகை வெளியிட்டுள்ளது. இதில் இந்தியாவைச் சேர்ந்த 27 நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன. ஒட்டுமொத்த விற்பனை, லாபம், சொத்துகள், சந்தை மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. முதல் பத்து இடங்களில் அமெரிக்காவைச் சேர்ந்த ஏழு நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன. 2 இடங்களை பிரிட்டனும், ஒரு இடத்தை ஜப்பானும் பிடித்துள்ளன.

புற்று நோயைத் தடுக்கும் வைட்டமின் ஈ

கீரை, பாதாம், முந்திரி போன்ற பருப்பு வகைகளைத் தொடர்ந்து சாப்பிடுகிறவர்களுக்குச் சிறுநீர்ப் பையில் புற்று நோய் வராது. இத்தகவல் அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக் கழகம் நடத்திய மருத்துவ ஆய்வில் தெரிய வந்துள்ளது. காய்கறிகள், பழங்கள், சமையல் எண்ணெய் ஆகியவற்றில் வைட்டமின் ஈ இருக்கிறது. இதில் ஆல்ஃபா, பீட்டா என்று இரண்டு வகைகள் உள்ளன. இதில் ஆல்ஃபா நல்ல பலனைத் தருகிறது. எனவே முந்திரி, பருப்புகள், கீரைகள், காய்கறிகளைத் தொடர்ந்து சாப்பிட வேண்டும் என்று கூறியுள்ளனர்.



• தாகூர்



நான்கு கிரகங்கள் ஒரே அணி வகுப்பில்...

நமது சூரியக் குடும்பத்தைச் சேர்ந்த புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன் ஆகிய நான்கு கிரகங்களும் ஒரே நேர்க்கோட்டில் அணி வகுத்தன. மார்ச் 29ந் தேதி இந்த அதிசய நிகழ்வு நடந்துள்ளது. 32 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் இந்த அரிய நிகழ்வை வெறும் கண்களால் கண்டு களித்துள்ளனர்.



புலவரும் திருடனும்

கவி பாடுவதில் திறமை பெற்றிருந்த புலவர் கீர்த்திவாசன். பல நாட்டு மன்னர்களைப் புகழ்ந்து பாடி வைரம், வைடூரியம், முத்து, பவளம் என விலை மதிப்பு மிக்கப் பொருட்களைப் பரிசாகப் பெற்றுக் கொண்டு நாடு திரும்பிக் கொண்டிருந்தார். நீண்ட தூரம் நடந்து வந்ததால் களைப்புற்றிருந்த புலவர் அன்றிரவை அந்த ஆசை புரியூர் சத்திரத்தில் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டு காலை விடிந்ததும் புறப்படலாம் என நினைத்தார்.



சத்திரத்தின் காவலாளி புலவரை வரவேற்று அன்னமிட்டு உபசரித்தான். பின் படுத்து உறங்கச் சென்றார். அந்தச் சத்திரத்தில் அவருடன் மேலும் பலர் வந்து தங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் பலே திருடன். அவன் புலவரைப் பற்றி நன்கு அறிந்தவன். நிச்சயம் புலவரிடம் விலை மதிப்பில்லா பொருட்கள் இருக்கும். அதை எப்படியும் அபகரித்துக் கொண்டு விட முடிவு செய்து விட்டான்.

புலவருக்குச் சற்றுத் தள்ளி தன் உடைமை அடங்கிய மூட்டையை வைத்துவிட்டு, "ஐயா, இந்த மூட்டையைப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் சத்திரத்தின் பின்புறம் சென்று வருகிறேன்" எனக் கூறினான். புலவர் அவனைப் பார்த்து புன்னகைத்து தலையசைத்தார். போனவன் திரும்பி வந்து அவருக்குச் சற்று தள்ளிப் படுத்துக் கொண்டான்.

விடியல் வர சற்று நேரம் இருக்க எழுந்த புலவர் சத்திரத்தின் பின் பகுதிக்குப் போக... அதை எதிர்பார்த்து காத்திருந்த திருடன் மெல்ல எழுந்து புலவரின் மூட்டையை அவிழ்த்து பார்க்க அதில், சாப்பிட ஒரு கலயமும், உடுத்த சில உடைகள் மட்டுமே இருந்தன. அவன் எதிர்பார்த்த விலை மதிப்பில்லாத எந்தப் பொருளும் இல்லை. அவன் ஆச்சரியப்பட்டுப் போனான். ஏனென்றால் புலவர் பரிசு வாங்கி அந்த மூட்டைக்குள் வைத்துக் கொண்டு வந்ததை நண்பன் மூலம் அறிந்துதான் அதைத் திருட பின் தொடர்ந்து வந்தான்.

திரும்பி வந்த போது சத்திரத்தில் தங்கியிருந்த மற்ற பயணிகளும் எழுந்து உட்கார்ந்து பயணத்திற்குத் தயாராகிக் கொண்டிருந்தனர்.

திருடன் ஆச்சரியமுற்று புலவரைக் கேட்டே விட்டான். "ஐயா, நான் ஒரு திருடன். உங்களிடமிருக்கும் விலையுயர்ந்த நவரத்தினங்களைத் திருடவே வந்தேன். ஆனால் உங்கள் மூட்டையில் அவற்றைக் காணவில்லையே! எப்படி மறைந்தன?"

புலவர் புன்னகை மாறாமல்... "நீ திருடன் என்பதை உன்னைப் பார்த்தவுடனே புரிந்து கொண்டேன். எந்தத் திருடனும் மற்றவர் மூட்டைகளைத்தான் சோதித்து திருடுவான். தன் மூட்டையைச் சோதிக்க மாட்டான்! அதனால்தான் ராத்திரி நீ சத்திரத்தின் பின் பகுதிக்குப் போனபோது என்னிடமிருந்த நவரத்தினங்களை உன் மூட்டைக்குள் வைத்துவிட்டேன்" என்றார். அவன் மூட்டையை அவிழ்த்து அந்த நவரத்தினங்களை எடுத்து மீண்டும் தன் மூட்டையில் வைத்துக் கொண்டு சத்திரத்தை விட்டு நடக்க ஆரம்பித்தார் புலவர். திருடன் திறந்த வாய் மூடாமல் அவர் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

- தா.ஆ. அருண்ராஜ்,
பன்னிரண்டாம் வகுப்பு, தாரமங்கலம்


'நாட்டுக்கும், வீட்டுக்கும் எரிபொருள் சேமிப்பு அவசியம்!'



எண்ணெய்த் துளிகள்...

எண்ணெய் மற்றும் இயற்கை வளங்கள் பூமியின் சில பகுதிகளில் தான் கிடைக்கின்றன. தென் அமெரிக்கா, யு.எஸ்.எஸ்.ஆர்., சௌதி போன்ற இடங்கள் எண்ணெய் வளம் மிக்கவை.

நம் கவனக் குறைவால் நிறைய எண்ணெய் வளங்கள் வீணாகிப் போகின்றன. சில நேரங்களில் கேஸ் அடுப்பு, கெரசின் அடுப்பு போன்றவை தேவையின்றி எரிவதால் எண்ணெய் வீணாகிறது. வண்டிகளில் கரும் புகை வருவதால் பெட்ரோல் அதிகம் செலவாகிறது. தவறான வழி முறைகளால் தொழிற்சாலைகளில் நிறைய எரிபொருள் செலவாகிறது.



வாகனத்தை மெதுவாக ஓட்டினால் நல்ல நிலையில் இருக்கும். இதனால் பெட்ரோல் மற்றும் டீசல் செலவு குறையும். அதிக பாரங்களை ஏற்றிச் செல்லக்கூடாது.

தூரம் குறைந்த இடங்களுக்கு பெட்ரோல் வண்டிகளைப் பயன்படுத்தக் கூடாது. சைக்கிள் பயன்படுத்தினால் எரிபொருள் தேவையே கிடையாது.

தொழிற்சாலைகளில் இருந்து வெளி



வரும் கரும் புகை சுற்றுச் சூழலை பாதிக்கிறது. இயந்திரங்களை முறையாகக் கையாண்டால் சிறப்பாகப் பொருட்களை உருவாக்கவும் முடியும்; எரி பொருளைப் பாதுகாக்கவும் முடியும்.

நட்பால் சாதிக்கலாம்!



வேலன் வீடு நாய் எலி குஞ்சுகள் பூனை நிலா

. க் காவலுக்கு ஒரு  வளர்த்தான். டில் த் தொல்லை அதிகம் இருந்தது. . ப் பொறி வைத்தும் பயனில்லை. க்கு  வளர்க்கும் யோசனை வந்தது. ஒரு யை வாங்கிக் கொண்டு டிற்கு வந்தான். யைக் கண்ட க்கு கோபம் வந்தது. ன் கோபத்தைப் பார்த்து  நடுங்கியது. ஏற்கெனவே க்குப் பயந்திருந்த க்கு இந்தக் காட்சி மிகுந்த கிலியை உண்டாக்கியது. ஆனால் யிடம் உள்ள பயத்தில் யால், யை வேட்டையாட முடியவில்லை. இதை உணர்ந்த ,  பிடிக்க வரும்போதெல்லாம் 'அதோ ' என்று கூற , யைப் பிடிப்பதை விட்டுவிட்டு, ஓட்டம் பிடித்தது.  வந்தும் த் தொல்லை குறையாததைக் கண்ட  2 நாட்கள் கண்காணித்தான். காரணம் புரிந்தது. யையும், யையும் அழைத்து இரண்டுக்கும் நட்பு ஏற்படுத்தினான். 2 நாட்களில் ம், யும் நண்பர்களாயின.  இனிமேல் இங்கிருந்தால் ஆபத்து என்பதை உணர்ந்தது. அன்று  ஒளியில் தன் களை அழைத்துக் கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பியது .

மனிதனுக்கே உரிய பூ!



விடுகதைப் பக்கம்

I 1. நீர் இருக்கும் குளமல்ல; கண் இருக்கும் விலங்கல்ல; ஆறாய் ஓடும் ஊற்றுமல்ல; ஆறாத் துயரில் உருவாகும் அது என்ன?

2. அன்பால் மலரும் பூ; அனைவரும் விரும்பும் பூ, மனிதனுக்கே உரிய பூ - என்ன பூ?

3. ஆடி இருக்கும் முகம் பார்க்க முடியாது; காற்று இருக்கும் சுவாசிக்க பயன் படாது; காற்றில் பறக்கும் பறவையும் அல்ல - அது என்ன?

- வி.பி. மதிமலர்,
எட்டாம் வகுப்பு, புனித சவேரியார் நடுநிலைப் பள்ளி, இடிந்த கரை

II 1. குண்டு முழி ராசாவுக்கு குடல் எல்லாம் பல் - அது என்ன?

2. வட்ட வட்டக் குயில்களாம், வாயில்லாக் குயில்களாம், சுற்றுகின்ற போதிலே சுகமான ராகமாம் - அது என்ன?

3. இறைத்த தண்ணீரை அள்ள முடியாது அது என்ன?

4. ஏரியில் இல்லாத நீர், தாகத்திற்கு உதவாத நீர் - அது என்ன?

- அ. ஆனந்தகுமார், எட்டாம் வகுப்பு,
நகர மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்

III 1. ஆயிரம் பூ பூக்கும், நூறு காய் காய்க்கும் - அது என்ன?

2. கல்லாலும், மண்ணாலும் கட்டாத வீடு; கதவு இல்லாத வீடு; காற்றினிலே ஆடும் வீடு - அது என்ன வீடு?

3. நோயில்லை, நொடியில்லை, நாளும் மெலிகிறான் - அவன் யார்?

4. கடல் நீரால் வளர்வான்; மழை நீரால் மடிவான். - அவன் யார்?

- கே. பரிதி ஓவியா, ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி

IV 1. பாதுகாப்பான பெட்டிக்குள் பயனுள்ளதொரு கடிகாரம் - அது என்ன?

2. வெறுங்காற்றில் பருத்தவன், வருங்காற்றில் பறப்பவன் - அவன் யார்?

3. வெளுத்த ஆளுக்கு கறுப்புத் தலைப்பாகை - அது என்ன?


4. வெள்ளைக்காரன் வருவான் என்று வெகு நேரம் காத்திருக்கிறார்கள் - அவன் யார்?

5. திரி இல்லாத விளக்கு, திரிலோகம் எல்லாம் தெரியுதாம் - அது என்ன?

ஜி. ப்ரணவ்,
கரூர்


விடைகள் :


I. 1. கண்ணீர் 2. சிரிப்பு 3. காற்றாடி
II. 1. மாதுளம்பழம் 2. இசைத்தட்டு 3. வார்த்தை 4. கண்ணீர்
III. 1. தென்னை மரம் 2. தூக்கணாங் குருவிக் கூடு 3. தேய்பிறைச் சந்திரன் 4. உப்பு
IV. 1. இதயம் 2. பலூன் 3. தீக்குச்சி 4. சாதம் 5. சூரியன்



தேன் கூட்டை
அடைய
தேனீக்கு வழி
காட்டுங்கள்!

நான்கு கட்டங்களிலும் ஒவ்வொரு பிராணி வித்தியாசப்பட்டுள்ளது. அவை என்ன?


1


2


3



4

விடை : 1. கங்காரு, 2. கோழி, 3. பன்றி, 4. புலி



வெற்றிக்குப்

மன்னர் விக்கிரமன் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிக் கொண்டிருந்தார். காரணம், அவர் படையெடுத்துச் சென்ற நாடுகளை எல்லாம் ஜெயித்து, அந்த நாட்டில் உள்ள கஜானாவிலிருந்த விலையுயர்ந்த பொருட்களை எல்லாம் கவர்ந்து, தன் நாட்டின் கருவூலத்தை



வழிய வழிய நிரப்பிவிட்டார்.

திடீரென்று மன்னருக்கு அந்த எண்ணம் தோன்றியது. தன்னைப் பற்றி, தன்னுடைய வெற்றியைப் பற்றி மக்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று தெரிந்து கொண்டால் என்ன?

அவர் வயதானவர் போன்று மாறு வேடம் பூண்டார். யாரிடமும் சொல்லாமல் நகரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினார்.

வேகமாக புரவியை ஓட்டி நகரத்தின் எல்லைப் பகுதியை அடைந்தார். மறைவிடத்தில் தன் குதிரையைக் கட்டி வைத்து விட்டு, கால் நடையாக நடக்க ஆரம்பித்தார். சிறிது தூரம் சென்றதும் ஒரு சிறிய வீட்டின் வாசல் திண்ணையில் நடுத்தர வயதைத் தாண்டிக் கொண்டிருக்கும் ஒருவர், தனக்குத் தானே ஏதோ புலம்பிக் கொண்டிருப்பது நிலவு ஒளியில் தெரிந்தது. மன்னர் மெதுவாக அந்த வீட்டிற்குச் சென்று எதிர்த் திண்ணையில் அமர்ந்து கொண்டார்.

"உனக்கு என்ன கவலை? நீ ஏன் அழுது புலம்புகிறாய்?" பரிவோடு கேட்டார் மன்னர்.

"ஐயா பெரியவரே! என்னோட கவலைக்கான காரணத்தைச் சொன்னால் உங்களால் என்ன செய்ய முடியும்? என் தலையெழுத்து அனுபவிக்கிறேன்" என்றார் விரக்தியோடு.

"அப்படி சொல்லாதேப்பா! வியாதி என்னதுன்னு தெரியாம மருந்து கொடுக்க முடியுமா? அதேபோல உன்னோட கவலைக்கான காரணத்தை அறியாமல் என்னால் உதவி செய்ய முடியுமா?" என்றார் மன்னர்.

"பெரியவரே! இந்த நேரத்தில் இங்கு வந்திருக்கும் தாங்கள் யார்?".

ஒரு நொடி சிந்தித்த மன்னர், "என் பெயர் கனகவேல். என் உறவினர் வீட்

பின்னால்...

டிற்கு வந்தேன். இரவு சாப்பாடு ஆனதும் வாசல் கட்டிலில் படுத்துக் கொண்டேன். புது இடமா... தூக்கம் வரவில்லை. அதனால் சற்றுக் காலார நடந்து வரலாம் என்று நடந்து வந்தபோதுதான் நீ புலம்புவதைக் கேட்டு உன் வீட்டிற்கு வந்தேன்'' என்று நம்பும்படி சாமர்த்தியமாக பதில் சொன்னார்.

''ஐயா! என் பெயர் ராஜலிங்கம். பெரியவராகிய உங்ககிட்டே என்னோட கவலையைச் சொல்கிறேன். எனக்கு கல்யாண வயதிலே ஒரு மகள் இருக்கிறாள். அவளுக்கு நல்ல இடத்திலே மாப்பிள்ளை கிடைத்தது. முப்பது பவுன் நகை போடும்படி மாப்பிள்ளை வீட்டுக்காரங்க கேட்டனர். என்னோட விவசாய நிலத்தை அடமானம் வைத்து எப்படியோ கஷ்டப்பட்டு மாப்பிள்ளை வீட்டார் கேட்ட சீர்வரிசைகளைத் தயார் செய்

த. ஜானகி

தேன். பக்கத்து கிராமத்தில் கல்யாணம். கல்யாணத்திற்கு முதல் நாள் பெண்ணை அழைத்துக் கொண்டு மாப்பிள்ளை வீட்டிற்கு மாட்டு வண்டியில் சென்று கொண்டிருக்கும்போது, வழியில் திருடன் நகைகள் உட்பட அத்தனை சாமான்களையும் கொள்ளையடித்துக் கொண்டு சென்றுவிட்டான். சொன்னபடி சீர்வரிசை செய்தால்தான் என் பெண்ணை திருமணம் செய்து கொள்ள முடியும் என்று பையனின்





பெற்றோர் கூறிவிட்டனர். நகைகள் இல்லாமல் என் பெண்ணை யார் கல்யாணம் செய்து கொள்வார்கள்? தற்சமயம் நான் சம்பாதிப்பது என் குடும்பத்தினர் வயிறார சாப்பிடத்தான் சரியாக இருக்கிறது. என் அருமை மகளோட எதிர்காலத்தை நினைத்தால் மனதிற்கு மிகவும் கவலையாக இருக்கிறது. அதனால்தான் அழுது புலம்பிக் கொண்டிருக்கேன்.''

பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த மன்னர் திடுக்கிட்டார். 'தன் நாட்டில் திருட்டா?'

''ஏம்பா ராஜலிங்கம்! நீ மன்னர்கிட்டே போய் முறையிட வேண்டியது தானே?''

''பெரியவரே! நம் நாட்டு மன்னரைப் பற்றி நான் சொல்லப்போவதைக் கேட்டு தயவு செய்து நீங்க என்னைத் தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள். அவர் பெரிய கொள்ளைக்காரர்; பேராசைக்காரர். அவர் பெயர் விக்கிரமன் இல்லை. அக்கிரமன்'' என்றார் அழுத்தம் திருத்தமாக.

இதைக்கேட்ட மன்னருக்குக் கோபம் கொப்பளித்தது. கோபத்தை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு கேட்டார்.

''எப்படி... எப்படி.... நீ சொல்றே?''

''பெரியவரே! நம் மன்னர் பேராசை பிடித்து அண்டை அயல் நாடுகளோடு படையெடுத்து, அவங்க கஜானாவிலிருந்து விலையுயர்ந்த பொருட்களை எல்லாம் கவர்ந்து கொண்டு வந்திருக்கிறார். ஒரு வகையிலே பார்த்தால் மன்னர் கொள்ளை அடித்திருக்கிறார் என்றே சொல்லலாம்.''

''ராஜலிங்கம்! சண்டைபோடுவது, படையெடுப்பது இதெல்லாம் மன்னரின் செயல்தானே?''

''பொதுவாக மற்றவங்க நமக்கு அக்கிரமமோ அநியாயமோ செய்தால் நாமும் சண்டைக்குப் போவோம். அப்படிப்பட்ட சண்டையிலே ஜெயிப்பவன் தான் வீரன். நம்ம மன்னர் தன்கிட்டேதான் படைபலம் இருக்கிறது என்ற ஆணவத்திலே, பொருள் சேர்க்கும் பேராசையிலே, எந்தத் தவறும் செய்யாத ஏன் நம் நாட்டு வழிக்கே வராத அண்டை அயல் நாடுகளுடன் வலுச்சண்டைக்குப் போய் ஜெயித்து விட்டு வந்திருக்கிறார். புலி பூனையோட சண்டை போடலாமா?''

திடுக்கிட்டார் மன்னர். ராஜலிங்கத்தின் பேச்சு உள்ளத்திலே சாட்டை அடி மாதிரி வலித்தது. தான் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும் வெற்றிக்குப் பின்னால் இப்படிப்பட்ட தீமைகள் இருக்கிறதா?

''பெரியவரே! திருடர்கள் நடமாட்டம் இல்லாமல் நம் மன்னரால் செய்ய முடியுமா? நான் பேசியதிலே ஏதாவது தவறு இருக்கிறதா?''

''ராஜலிங்கம்! நீ உண்மையைத்தான் சொல்லியிருக்கிறாய். என் நண்பனோட மகன் அரண்மனையிலே காவல் துறையிலே உயர் பதவியில் இருக்கிறான். அவனிடம் உன் விஷயத்தைச் சொல்லப் போகிறேன். திருடு போன நகைகளை நிச்சயம் கண்டுபிடித்துக் கொடுத்துவிடுவான். உன் மகள் கல்யாணமும் கட்டாயம் நடைபெறும், கவலைப்படாதே. இந்தச் செய்தியை அவன் ராஜாவிடம் சொல்வான். நம் மன்னரும் நம் நாட்டின் நலத்தில் கட்டாயம் கவனம் செலுத்துவார் என்ற நம்பிக்கை இருக்கிறது. வரட்டுமா?'' என்று கூறி விடைபெற்றுச் சென்றார்.

குறுக்கெழுத்துப் புதிர்



கட்டங்களை நிரப்புங்கள்

இடமிருந்து வலம்

1. விழாக்கள் நடக்கும் இடம் (5)
3. அகத்தின் அழகு இதில் தெரியும் (3)
4. நெசவு செய்யும் இயந்திரம் (2)
11. நெல்லைப் போரடிக்கும் இடம் என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)
14. தொழிற்சாலைகளில் நேரத்தை அறிவிக்க இது ஊதப்படும் (3)

வலமிருந்து இடம்

6. கூடி உண்ணும் பறவை (3)
9. பொன் (4)
10. கர்ணன் ஒரு கொடை .... (4)
13. காயின் அடுத்த நிலை (2)
16. ஒரு வகை மேள வாத்தியம் (5)

மேலிருந்து கீழ்


1. விருட்சம் (3)
2. சக்கரங்களைப் பாதுகாப்பது (3)
7. ரிக் என்பது .... (3)
8. வீட்டுச் சுவரில் இருக்கும் பிராணி (3)
12. முகில் (3)


கீழிருந்து மேல்

5. இதைப் பாதுகாக்க செருப்பு அணிகிறோம் (3)
10. இந்தியாவின் ஒரு மாநிலம் மேற்கு .... (5)
14. நதிகள் கூடும் இடம் (5)
15. செல்வம் (3)
16. பாண்டியர்களின் தலைநகரம் (3)

- வி.பி. மதியரசி, எட்டாம் வகுப்பு,
புனித சவேரியார் நடுநிலைப் பள்ளி,
ஆவுடையாள்புரம், திருநெல்வேலி

விடை 34 ஆம் பக்கம்






வல்லவனுக்கு வல்லவன்!

கதை : வி. கலாதேவி, ஒன்பதாம் வகுப்பு,
அ.பெ.மே.நி. பள்ளி, இடைப்பாடி

படம் : சேகர்



விழுப்புரம் ஸ்பெஷல்

செஞ்சியின் வரலாற்றுச் சிறப்புகள்



இப்பிரதேசம் சிங்கபுர நாடு என வழங்கி வந்ததாகவும், அது நாளடைவில் சிங்கி நாடு எனவும் மாறி பிறகு செஞ்சி என அழைக்கப்பட்டது.

செஞ்சி சிங்கபுர நாடு என்று அழைக்கப்பட்டதற்கான ஆதாரமான கல்வெட்டுகள் உள்ளன.

பிஜப்பூர் சுல்தான் காலத்தில் செஞ்சி பாதுஷாபாத் என்று வழங்கப் பட்டு வந்தது.

பின்பு கி.பி. 1698ல் முகலாயர் ஆட்சியில் செஞ்சி நசரத் கட்டா என்று அழைக் கப்பட்டது.

ஃபிரெஞ்சு மற்றும் பரங்கியர் ஆட்சியில் சின்ஞ்சி அல்லது ஜிஞ்சி என்றும் அழைக்கப் பட்டது.

செஞ்சியின் சிறப்பு:

செஞ்சி என்று சொன்னவுடன் பலர் நினைவிற்கு வருவது மனதை வசப்படுத்தும் வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டைகள்தான்.

ராஜகிரி (ராஜாக் கோட்டை):

ராஜகிரி கோட்டை கி.பி.1200 - 1240ஆம் ஆண்டுகளில் ஆனந்தக்கோன் என்ற மன்னனால் அமைக்கப்பட்டு முதலில் ஆனந்தகிரி என்ற பெயரில் வழங்கப்பட்டது.

ராஜகிரி சுமார் 800 அடி உயரம் கொண்டது: ராஜகிரியின் உச்சிக்குச் செல்ல 1012 படிகள் உள்ளன. ராஜகிரியின் உச்சிக்குச் செல்லும் வழியில் அருமையான கோவில்களும், சிற்பங்களும், கட்டடங்களும், சுனை நீர் அருவிகளும், நீர் நிலைகளும் அமைந்துள்ளன.

ராஜகிரியின் உச்சியில் ஒரு செங்குத்தான பாலத்தைக் கடப்பதற்கு தொங்கு மரப் பாலம் உள்ளது.

கிருஷ்ணகிரி (ராணிக்கோட்டை):

கிருஷ்ணகிரி கோட்டை கி.பி. 1240 - 1270 ஆம் ஆண்டுகளில் செஞ்சியை ஆண்ட கிருஷ்ணக்கோன் என்னும் மன்னரால் அமைக்கப்பட்டது.

ஆனந்தக்கோனின் மகன் கிருஷ்ணக்கோன் தன் கலை ஆர்வம் அனைத்தையும் வெளிப்படுத்தி அமைத்த கட்டடங்கள், இன்றும் அவன் புகழ் பாடுகின்றன.

கிருஷ்ணகிரி 500 அடி உயரம் கொண்டது. அதன் உச்சியை அடைய பழுதடையாத 557 படிகள் உள்ளன. உச்சிக்குச் செல்லும் வழியில் 10 மீட்டர் நீளமும், 5 மீ அகலமும், 3 மீட்டர் உயரமும் உள்ள எண்ணெய் மற்றும் நெய் சேமிப்புக் கிணறு உள்ளது.

கல்யாண மஹால்:

செஞ்சிக் கோட்டையைப் பார்ப்பவர் அனைவரின் கருத்தையும், கண்ணையும் கவருவது, கம்பீரமாக ராஜகிரியில் அமைந்துள்ள கல்யாண மகால் என்னும் ராணி மஹால். கல்யாண மகால் - துபாஷ் கிருஷ்ணப்பா என்ற நாயக்க மன்னரால் கி.பி. 1490 - 1520ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. அடுக்கடுக்கான 8 நிலைகளைக் கொண்டது. 27 அடி உயரம் உள்ளது.

செஞ்சியைச் சுற்றிலும் உள்ள சிறப்பான கோவில்கள்:

திரெளபதி அம்மன் பிறந்த ஊர் செஞ்சி என்று ஒரு செவிவழிக் கதை உண்டு. அதனால், சுற்று வட்டாரத்தில் எந்த ஊரில் திரெளபதி அம்மன் கோவில் கட்டப்பட்டாலும், செஞ்சியிலிருந்து மண் எடுப்பது வழக்கம்.

எண்ணாயிரம் - நரசிங்கப் பெருமாள் கோவில்

ஏசாலம் - சிவன் கோவில்

பிரம்மதேசம் - பாடலீஸ்வரர் கோவில்

மேலச்சேரி: வரலாற்றுச் சிறப்பு மிக்க நாயக்க மன்னர்கள் காலத்தில் பாறையைக் குடைந்து அமைக்கப்பட்ட குடைவறை சிவன் கோவில்.

சிங்காவரம்: பள்ளி கொண்டிருக்கும் அரங்கநாதப் பெருமாள் கோவில்.

— மு. சுவாமிநாதன்,
ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி, விழுப்புரம் மாவட்டம்

அட்டையில்:
ராஜாமலைக்கு அடியில்
சாரதா மெட்ரிக் பள்ளி
மாணவர்கள்



விழுப்புரம் ஸ்பெஷல்

உடைந்து போன முட்டைகள்!

மக்கள் நடமாட்டம் மிகுந்த அந்தத் தெரு வழியாக சைக்கிளை ஓட்டிக் கொண்டு வந்தான் கோபி. அதில் நிறைய முட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன.

ஒரு திருப்பத்தில் அந்த வண்டி கவிழ்ந்தது. அதில் இருந்த முட்டைகள் எல்லாம் கீழே விழுந்து உடைந்து போயின.

"ஐயோ, முட்டைகள் எல்லாம் வீணாகிப் போய் விட்டதே. நான் இனி என்ன செய்வேன்?" என்று அழுது புலம்பினான் கோபி.

அப்போது அங்கு வந்த பெரியவர் ஒருவர் "ஏன் அழுகிறாய், உடைந்து போன முட்டைக்கான தொகையை உன்னால் தர முடியாதா?" என்று கேட்டார்.

"ஐயா, நானோ ஏழை. என்னால் எப்படி இருநூறு ரூபாய் புரட்ட முடியும்?" என்று அழுதான் கோபி.

"கவலைப்படாதே, உனக்கு உதவி செய்யும் இரக்க குணம் படைத்தவர் பலர் உள்ளனர்" என்று சொல்லி விட்டுத் தன் தோளிலிருந்து துண்டைத் தரையில் விரித்தார். தன் பையிலிருந்த பத்து





ரூபாயை எடுத்து அந்தத் துண்டில் போட்டார்.

அந்தக் கூட்டத்திலிருந்த பலரும் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் என்று அந்தத் துண்டில் போட்டனர். சிறிது நேரத்தில் நிறையப் பணம் சேர்ந்து விட்டது.

பணத்தைப் பெரியவரே எண்ணினார். இருநூறு ரூபாய்க்கு மேல் இருந்தது.

அந்தத் தொகையை கோபியிடம் தந்த அவர் ''இனியாவது கவனமாக நடந்து கொள்'' என்று சொல்லி விட்டுச் சென்றார்.

கூட்டம் கலையத் தொடங்கியது. எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த ஒருவன், ''தம்பி! அந்தப் பெரியவர் மட்டும் வரவில்லை என்றால் உன் கதி என்னவாகி இருக்கும்? என்ன நல்ல குணம் அவருக்கு! அவரை உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

அதற்கு கோபி, ''அவர் என் முதலாளி, இந்த முட்டைகளை ஏற்றி அனுப்பியவர்'' என்றான்!

கேட்டவருக்கு மயக்கமே வந்து விட்டது!

- ஜி.என். பவித்ரா, ஐந்தாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சிக் கோட்டை

விடுகதைக்கு விடை என்ன?

1. ஜாடி மேலே குரங்கு - அது என்ன?

2. வாயிலிருந்து நூல் எடுப்பான், மந்திரவாதி அல்ல - அது என்ன?

3.ராசா மகள் பூ இல்லாமல் சடை போடமாட்டாள் - அது என்ன?

4. மஞ்சள் சட்டை மாப்பிள்ளை, மணமணக்கிறார் வீட்டிலே - அது என்ன?

- க. பரிதி ஓவியா,
ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
விழுப்புரம் மாவட்டம்

விடை:
1. முந்திரிப்பழம் 2. சிலந்தி
3. முருங்கைமரம் 4. எலுமிச்சம் பழம்

1. கை இல்லாமல் நீந்துவான், கால் இல்லாமல் தண்ணீரில் ஓடுவான் - அவன் யார்?

2. தண்ணீர் இல்லாத தடாகத்தில் தாவிப்பாயுது ஒரு கப்பல் - அது என்ன?

3. வானத்திலே பறந்திடுவான் பறவை அல்ல; வட்டமிட்டுச் சுற்றிடுவான் விமானம் அல்ல - அவன் யார்?

4. உயரத்தில் ஒரு ரோஜா, உலகெங்கும் அதே ரோஜா - அது என்ன?

5. வித்தில்லாமல் விளைவது, வெட்டாமல் சாயுதே - அது என்ன?

- ரா. ராதிகா, ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி.

விடை: 1. படகு 2. ஒட்டகம் 3. பட்டம். 4. நிலா 5. வாழைமரம்




செஞ்சி சிரிப்புகள்

"விற்பனைத் துறையில் உங்களுக்கு எவ்வளவு அனுபவம்?"

"ஏகப்பட்ட அனுபவம் எனக்கு, என் வீட்டை விற்றிருக்கிறேன், காரை விற்றிருக்கிறேன், வீட்டிலிருந்த மரச் சாமான்களை விற்றிருக்கிறேன்...!"

- எஸ். ஷாலினி,
நான்காம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சிக்கோட்டை



"டேய் சோமு, எங்க கணக்கு வாத்தியார் சுவைபட பாடம் நடத்துவார்."

"எப்படி?"

'வட்ட, பாதுஷா, உருண்டை லட்டு, சதுர மைசூர்பாகு, செவ்வக சோம்பப்டி என்று தான்..."

- கி. நிவேதா,
ஐந்தாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சிக்கோட்டை

"உங்களுக்குக் கொடுத்த மருந்தை தேனுடன் கலந்து சாப்பிட்டீர்களா?"

"ஆமாங்க, நானும் என் மனைவி தேனும் கலந்து சாப்பிட்டோம்."

- ர. ருக்மணி, ஏழாம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, செஞ்சி



"விடுமுறை நாட்களில் கூட ஸ்கூல் இருக்குமா?"

"ஆமாம், விடுமுறை நாட்களில் ஸ்கூல் எங்கே போகும்?"

- வி.மனோ,
நான்காம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சிக்கோட்டை



விழுப்புரம் ஸ்பெஷல்

ஓவியக் கூடம்



விழுப்புரம் ஸ்பெஷல்

ரா. மீனா,
ஐந்தாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி





ஆர். பாலாஜி,
ஐந்தாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி



டி. தர்மலிங்கம்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
அரகண்டநல்லூர்,
விழுப்புரம்




பி.ராம்பிரகாஷ்,
யு.கே.ஜி.
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி



க. வரலட்சுமி,
ஐந்தாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி



பி.ஏ. விக்னேஷ்,
முதல் வகுப்பு, செஞ்சி



உங்களுக்குத் தெரியுமா?



1. சூரியனின் வயது என்ன?
   500 கோடி ஆண்டுகள்
2. அதிக ஞாபக சக்தி உள்ள விலங்கு எது?
   யானை
3. மாம்பழத்தின் பிறப்பிடம் எது?
   இந்தியா
4. திமிங்கிலத்தின் உடலில் எவ்வளவு இரத்தம் இருக்கும்?
   8 ஆயிரம் லிட்டர்
5. குதுப்மினாரின் உயரம் எவ்வளவு?
   240 அடி
6. பூரானுக்கு எத்தனை கால்கள் உள்ளன?
   100 கால்கள்

- மு. பிரதாப் குமார், சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சிக் கோட்டை

உயர்ந்த நட்பு!

விழுப்புரம் மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் ஒன்றாக செஞ்சிக்கோட்டையையும், ராஜா தேசிங்குவையும் (ராஜா செய்சிங் எனவும் குறிப்பிடுவர்) பலர் அறிந்திருப்பர். ஆனால் அதனுடன் தொடர்பு கொண்ட 'வழுதாவூர் கோட்டை'யையும் 'முகமத்கான்' என்ற அரசனையும் பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

'வழுதாவூர்', விழுப்புரத்தில் இருந்து சுமார் 30கி.மீ. வடகிழக்கில் அமைந்து உள்ளது. செஞ்சிக் கோட்டை தொல்பொருள் துறையினரால் பாதுகாக்கப்பட்டாலும், வழுதாவூர் கோட்டை பராமரிக்கப்படாததால், முற்றிலும் அழிந்த நிலையில் அகழியும், தானியக் களஞ்சியமும் விளை நிலங்களிடையே மிஞ்சி உள்ளன.

ராஜா தேசிங்கும், முகமத்கானும் உயிர் நண்பர்கள். இருவரும் தத்தம் இடத்தில் முறையே பள்ளி வாசல் (மசூதி) மற்றும் விஷ்ணு கோயில் கட்டி உள்ளனர். நண்பர்கள் சந்திக்கும்போது தத்தம் வழிபாட்டு முறையை மேற்கொள்ளவே இவை அமைக்கப்பட்டு உள்ளன. முகமத்கான் மணமேடையில் இருந்த போது, ராஜாதேசிங்கின் ஒற்றன், செஞ்சியில் ஆற்காட்டு நவாப்பிற்கும், ராஜா தேசிங்கிற்கும் போர் மூண்டு விட்டதாகச் செய்தி கூறினான். ராஜா முகமத்கான் திருமணத்தை நிறுத்திவிட்டு நண்பனின் இடுக்கண் களைய, போருக்குப் புறப்பட்டுச் சென்றதாகவும், அப்போரில் வீரமரணம் அடைந்து விட்டதாகவும் கூறுகின்றனர். அச் செய்திகேட்ட ராஜா தேசிங்கு, தமது வாளை வானில் வீசி, மார்பில் தாங்கி உயிர் நீத்தார்!

- எஸ். தாமரைக் கண்ணன்,
மூன்றாம் வகுப்பு,
செயின்ட் பேட்ரிக் உயர்நிலைப் பள்ளி,
கலிங்கமலை,
வழுதாவூர் அஞ்சல்,
விழுப்புரம் மாவட்டம்.



விழுப்புரம் ஸ்பெஷல்

உண்மை சுசக்கும்!

ஏழ்மையில் - நேர்மை
செல்வத்தில் - எளிமை
கோபத்தில் - பொறுமை
தோல்வியில் - விடாமுயற்சி
துன்பத்தில் - தைரியம்
இன்பத்தில் - இரக்கம்
கடமையில் - உண்மை
போரில் - வீரம்
பதவியில் - பணிவு
வியாபாரத்தில் - இலட்சியம்

- ஜே. காதர் பாட்ஷா,
மூன்றாம் வகுப்பு,
செஞ்சிக் கோட்டை

மலர் என்றால்...

அறிவு என்றால் அப்துல்கலாம்
அன்பு என்றால் அன்னை தெரசா
அமைதி என்றால் அண்ணல் காந்தி
கவிதை என்றால் பாரதி
வீரம் என்றால் கட்டபொம்மன்
குழந்தை என்றால் நேரு
கொடை என்றால் பாரி வள்ளல்
ஆசிரியர் என்றால் இராதாகிருஷ்ணன்
சட்டம் என்றால் அம்பேத்கர்
மலர் என்றால் மல்லிகை!

- ஐ. சுஜாதா,
ஒன்பதாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி, ஆட்சிப்பாக்கம்,
திண்டிவனம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்


கோயிலின் சிறப்பு!

என் தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, தங்கையுடன் அண்மையில் இம்மாவட்டம் உளுந்தூர் பேட்டை அருகில் பரிக்கல் என்ற கிராமத்துக் கோவிலுக்குச் சென்று வந்தோம். இங்குள்ள லட்சுமி நரசிம்மர் மிகவும் சக்தி வாய்ந்தவர் என்கிறார்கள். மற்ற எல்லா லட்சுமி நரசிம்மர் விக்ரகங்களிலும் மார்பில் லட்சுமியை நரசிம்மர் அணைத்துக் கொண்டிருப்பதாக அமைந்திருக்கும். ஆனால் இந்தத் திருக் கோவிலில், லட்சுமி தனது கரங்களால் நரசிம் மரை அணைத்துக் கொண்டிருப்பதாக அமைந் துள்ளது. எனவே இந்தச்சிறப்பு அம்சம் கருதி மிகவும் சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

- எஸ்.ஆர். சங்கீதா
ஐந்தாம் வகுப்பு, சபரி மெட்ரிக்,
கனியமூர்

சிபிக்கு அருளிய சிவன்

வேடுவனால் வீழ்த்தப்பட்ட புறாவின் உயிரைக் காத்திட தன் சதையை அறுத்துத் தந்து, கடைசியில் தனது உயிரையே மாய்த்துக் கொள் ளத் துணிந்த சிபிச் சக்கரவர்த்தி கதை தெரி யுமல்லவா! அந்தச் சிபி மன்னனின் அன்பையும், பக்தியையும் சோதிக்க எண்ணிய இறைவன், வேடுவனாகவும், அம்பிகை - புறாவாகவும் வந்து இறுதியில் சிபியின் இழந்த கண்ணைக் கொடுத்த சிவபெருமான் கோயில், விழுப்புரம் மாவட்டம் பனையபுரத்தில் உள்ளது. இக்கோயிலின் சுவாமி பெயர் ஸ்ரீ நேத்ரோ உதார கேஸ்வரர். இதன் பொருள் கண் உகந்த ஈஸ்வரன் என்பதாகும். அம்பிகை பெயர் - ஸ்ரீ பறவை நாயகி, பறவையாக உருவெடுத்த தால் அப்பெயர்.



– இராஜேந்திரன்,
மதுரை

ஒரே விடை!

ஏதாவது ஒரு 3 இலக்க எண்ணை எடுத்துக் கொள்ளுங்கள். முதல் இலக்க எண் கடைசி இலக்க எண்ணை விடப் பெரியதாக இருக்க வேண்டும் (725). இந்த எண்ணைத் தலைகீழாக மாற்றுங்கள் (527). சிறிய எண்ணைப் பெரிய எண்ணிலிருந்து கழித்து விடுங்கள்.

725 527 198	இதைத் தலைகீழாக்கி இரண்டையும் கூட்டுங்கள்	198 891 + 1089

இதைப் போல் வேறு எந்த 3 இலக்க எண்ணை எடுத்து இவ்வாறு செய்தாலும் 1089தான் வரும்.

- ஜி. கவிதா, விழுப்புரம்





புதையல்

1

கடல், கடல், கடல்!

''ரெண்டு இட்லி, ஒரு வடை, ஒரு கரண்டி பொங்கல்'' என்று மகாலிங்க வாத்தியார் சொன்னதுமே பாலுவுக்கு அழுகை வந்துவிட்டது. அடக் கடவுளே! ரெண்டு இட்லியும் ஒரு வடையும் ஒரே வாயில் உள்ளே போய்விடும். ஒரு கரண்டி பொங்கல் பல்லுக்கு மட்டும்தான் போதுமானது! அப்புறம் பசி எங்கிருந்து அடங்கும்?

அவனுக்கு அன்றைய காலை மெனுவைக் கேட்டதுமே அழுகை அழுகையாக வந்துவிட்டது. குறைந்தபட்சம் பத்து இட்லிகள் வேண்டும். பொங்கல் என்றால் மூணு ப்ளேட். வடைக்கு லிமிட் உண்டா என்ன? எத்தனை ஆனாலும் சம்மதமே.


''குண்டா! கொஞ்சம் சாப்பாட்டைக் குறைக்கணும்டா. ஸ்கவுட்ல இருக்கற பையன் இவ்ளோ குண்டா இருந்தா எப்படி ஓடி ஆடி வேலை செய்ய முடியும்?'' என்று கேட்டார் வாத்தியார்.

பாலுவுக்குச் சிரிப்பு வந்தது. அவன் குண்டுதான். செம குண்டு! பின்னால் நின்று வேறு யாராவது இறுக்கிப் பிடிக்கப் பார்த்தால், அவன் தொப்பை ஒரு போதும் இரு கைகளுக்கு அடங்காது! மூக்கில் வழுக்கி விழும் கண்ணாடியும் அவன் தொப்பையும், வார வார அடங்காமல் தூக்கிக் கொண்டு முன்னால் நிற்கும் தலைமுடியும் சேர்ந்து, அவனை வகுப்பறையில் ஒரு கார்ட்டூனாகத்தான் எப்போதும் காட்டும். ஆனால் யாரும் அவனை கிண்டலுக்காக 'குண்டா' என்று கூப்பிடமாட்டார்கள். அது ஒரு செல்லப் பெயர்.

''க்ளாஸுக்கு ஒரு புள்ளையார் இருந்தா நல்லதுதானே சார்'' என்பான் பக்கத்து டெஸ்க் பத்மநாபன்.

வகுப்பறையே சிரிப்பில் வெடிக்கும். பாலுவும் சேர்ந்து சிரிப்பான். அவனது உருவத்தைப் பற்றி யார் பேசினாலும் அவனுக்குக் கோபமோ, வருத்தமோ வராது. எல்லாமே அன்பால் செய்யப்படும் தமாஷ் என்றுதான் எடுத்துக் கொள்ளுவான். குறிப்பாக மகாலிங்க வாத்தியார். அப்பா! எப்பேர்ப்பட்ட கிண்டல் பேர்வழி! அதுவும் பாலுவைச் சீண்டுவது என்றால் அவருக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி. கிண்டல் முடிந்த சூட்டிலேயே அவர் இன்னொன்றும் சொல்லுவார். அதுதான் அவரிடம் பாலுவுக்கு ரொம்பப் பிடித்த விஷயம்.

''பாருங்கடா! நம்ம புள்ளையாருக்கு உடம்பு மட்டுமில்லை... மூளையும் பெரிசு. இன்னி வரைக்கும் க்ளாஸ்லே அவனளவுக்கு வேற யார் மார்க் வாங்கியிருக்காங்க. சொல்லுங்க பார்ப்போம்? ஒரு எக்ஸாம்லயாவது ஃபஸ்ட் ரேங்கைத் தவிர வேற வாங்கியிருக்கானா?''



பாலுவுக்குப் பரம சந்தோஷமாக இருக்கும். மனசுவிட்டு ஒரு வாத்தியார் இப்படி அத்தனை மாணவர்களுக்கு எதிரில் பாராட்டுவதைவிட வேறென்ன வேண்டும்?

அவன் அம்மாவுக்குத்தான் அந்த விஷயம் கவலையளித்தது. பார்க்கிற டாக்டர்களிடமெல்லாம் தவறாமல் கேட்டுக் கொண்டிருப்பாள். ''என் பிள்ளை ஏன் டாக்டர் இவ்ளோ குண்டா இருக்கான்?''

என்னமோ சில ஹார்மோன்கள் அதிகம் சுரப்பதனால்தான் குண்டர்கள் குண்டாக இருக்கிறார்கள் என்று எல்லா டாக்டர்களும் சொன்னார்கள்.

''டயட்ல இருக்கணும். தினமும் வாக்கிங் போகணும். சின்னப் பையந்தானே... பதினாறு, பதினெட்டு வயசாறதுக்குள்ள இளைச்சுடுவான்'' என்பார்கள்.

ஆனால் பாலுவுக்கு இளைக்கிற உத்தேசமே இல்லை! எதற்கு இளைக்க வேண்டும்? குண்டாக இருப்பதிலும் பல சௌகரியங்கள் இருக்கின்றன. ரொம்ப முக்கியம், அத்தனைபேரின் கவனத்தையும் சுலபமாகக் கவரமுடிகிறது. வீட்டிலும் சரி,

தீவு!

பா.ராகவன்

பள்ளியிலும் சரி, யாரும் அதிக மாக வேலை வாங்குவதில்லை. சும்மா இருக்கிற நேரங்களில் உட் கார்ந்து உருப்படியாக நிறையப் படிக்க முடிகிறது.

இப்படியான காரணங்கள் மட்டு மில்லை. இயல்பிலேயே அவனுக்கு நொறுக்குத் தீனி என்றால் ரொம்பப் பிடிக்கும். கட்டுப்படுத்த முடி யாத ஒரே பெரிய கெட்ட பழக்கம் அது. வறுத்த வேர்க் கடலை, பொறித்த அப்பளம், சமோசா, பஃப், பஜ்ஜி, வடை, பூரி கிழங்கு என்று



எதெல்லாம் நாக்குக்குப் பிடிக்கிறதோ, அதெல்லாம் ஏனோ உடம்புக்குப் பிடிப் பதில்லை. நாக்குக்கும் உடம்புக்கும் அப்படி யென்ன ஜென்மப்பகையோ? ஐ டோண்ட் கேர்! என் ஓட்டு நாக்குக்குத்தான் என்று தெளிவாக இருந்தான் பாலு.

அத்தனை தூரம் அவனைப் பற்றி நன்கு அறிந்த வாத்தியார்தான் இன்றைக்கு இப்படி இரக்கமே இல்லாமல் ரெண்டு இட்லி, ஒரு வடை, ஒரு கரண்டி பொங்கல் என்று

சொல்லுகிறார்.

"புள்ளையாரே! நாம்ம ஸ்டீம் போட்டுல போகப் போறோம். அந்தத் தீவுல ஆசுபத்திரியெல்லாம் ஒண்ணும் கிடையாது. உடம்புக்கு ஒண்ணுன்னா ரொம்பக் கஷ்டமாயிடும். லிமிட்டா சாப்பிடறதுதான் நல்லது. தவிர, கடல் பயணத்தின்போது நிறையச் சாப்பிடறதும் நல்லதில்லை" என்று மகாலிங்க வாத்தியார் சொன்னார்.

கடல் பயணம்!

எத்தனை நாள் கனவு அது! கடலுக்குப் பக்கத்திலேயே இத்தனை வருஷமாக வாழ்ந்து வந்தாலும் படகு ஏறிப் போகிற கனவு மட்டும் நனவாகாமலேயே இருந்தது. பல பையன்கள் லாகவமாக நீச்சல் அடிப்பார்கள். பொங்கி எழுந்து வரும் அலையின்மீது தாவிக்குதித்து ஒரு மீன் மாதிரி துள்ளி எழுவார்கள். பாலுவுக்குப் பார்க்கப் பொறாமையாக இருக்கும். குண்டாக இருப்பதில் இதுதான் மிகப் பெரிய பிரச்னை! யாரும் அவனுக்கு நீச்சல் சொல்லிக் கொடுக்கக் கூட முன் வர மாட்டேன் என்கிறார்கள்.

ஆனால் பள்ளியில் சாரணர் வகுப்பில் இருக்கிற மாணவர்களை கடற்படை அதிகாரிகள் துணையுடன் பக்கத்தில் இருக்கிற பன்றித் தீவுக்கு அழைத்துப் போகிறார்கள் என்கிற நல்ல சேதி வந்ததுமே பாலு பரவசமாகிவிட்டான். அவன்தான் அந்தப் பள்ளிக்கூடத்தில் சாரணர் படை லீடர்.

அதிகாலை ஆறு மணிக்கு மாணவர்கள் அத்தனை பேரும் கடலோரக் காவல் படையின் அலுவலகத்துக்கு வந்து குழுமிவிட்டார்கள்.

"பாய்ஸ்! ஒரு மாறுபட்ட அனுபவத்தை உங்களுக்குத் தரணும்தான் பன்றித்தீவுக்கு சாரணர்களைக் கூட்டிக்கிட்டுப் போக ஏற்பாடு செஞ்சோம். இந்த முயற்சிக்கு ஒத்துழைச்ச கடலோரக் காவல் படையினருக்கு நம்மோட நன்றிகளை முதல்ல சொல்லிடணும். பன்றித் தீவு இங்கேயிருந்து ஆறு கடல் மைல் தொலைவுல இருக்கு. நாம இப்ப எதுக்கு அங்க போறோம் தெரியுமில்லையா?"

"தெரியும் சார். தீவை ஸ்டடி பண்ணணும்னு சொல்லியிருக்கீங்க. அங்க என்னென்ன தாவரங்கள் இருக்கு, மண் எப்படி இருக்கு, என்னென்ன பறவைகள், உயிரினங்கள் நிறைய இருக்கு... இதையெல்லாம் கவனிக்கணும். அப்புறம், நம்ம ஊரைவிட தீவு எப்படி, எதனால, ஏன் சுத்தமானதா இருக்குங்கறதைப் பத்தி ஒரு கட்டுரை எழுதணும்..."

"வெரி குட் பாலு. எல்லாரும் கேட்டுக்கிட்டீங்களா? புறப்படுவோமா?"

பையன்கள் ஹோவென்று உற்சாகக் குரல் எழுப்பியவண்ணம், அந்தக் கடலோரக் காவல்படை அலுவலகத்தின் பின்புறம் அமைக்கப்பட்டிருந்த சிறிய போட் ஜெட்டியின் மரப்பாலத்தின் மீது திமுதிமுவென்று ஓடி, தயாராக நின்றிருந்த ஸ்டீம் போட்டில் ஏறினார்கள்.

"பார்த்து! பார்த்து! மெதுவா ஏறுங்க" என்றார் வாத்தியார்.

"டோண்ட் ஒர்ரி சார். எங்க சார்ஜண்ட்ஸ் அங்க இருக்காங்க. அவங்க பார்த்துப்பாங்க" என்று சொன்னார் வெள்ளை வெளேரென்று உயரமாக, ட்ரிம்மாக இருந்த கடற்படை அதிகாரி.

"தேங்க்யூ வெரிமச் கேப்டன் நாராயணமூர்த்தி! நாங்க கிளம்பறோம்" என்று அவரிடம் விடைபெற்று

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 ம	ண்	2 ட	ப	ம்	■	3 மு	க	ம்
ர	■	ய	■	4 த	றி	■	■	ள
ம்	■	ர்	■	5 பா	■	ம்	க	6 கா
■	■	■	7 வே	■	8 ப	■	■	ங்
ம்	க	ங்	9 த	■	ல்	ள	ள்	10 வ
ம	■	■	ம்	■	லி	■	■	■
11 க	ள	ம்	■	12 மே	■	ம்	■	ரை
ங்	■	■	ளி	13 க	■	ன	■	து
14 ச	ங்	கு	■	ம்	ள	15 த	த்	16 ம

வாத்தியாரும் வந்து படகில் ஏறிக் கொண்டார். படகு சிறு உறுமலுடன் புறப்பட்டது.

''கடல்லே எப்படி திசை தெரியும் சார்?'' அவன் கேட்பதற்காகக் காத்திருந்த மாதிரி, ஒரு கடற்படை அதிகாரி அவனை அழைத்துக் கொண்டு எஞ்சின் ரூமுக்குப் போனார்.

''பாய்ஸ்! எல்லாரும் வாங்க'' என்று அழைத்து, அங்கே படகு ஓட்டுநருக்கு முன்னால் இருந்த திசைகாட்டும் கருவியைச் சுட்டிக் காட்டினார்.

''இதை வெச்சுத்தான் கண்டுபிடிப்போம். இது ஒரு அறிவியல்! கடல் இயல்னு தனி சப்ஜெக்ட் இருக்கு. கடல் அறிவியல் வேற, கடல் இயல்வேற! ரொம்ப இண்ட்ரஸ்டிங்கா இருக்கு. உங்கள்ள எத்தனை பேருக்கு கப்பல் கேப்டன் ஆகணும்னு லட்சியம் இருக்கு?'' என்று கேட்டார் அந்த அதிகாரி.

பல பையன்கள் கையைத் தூக்கினார்கள்.

''வெரி குட். தண்ணீர்ங்கறது ஒரு சக்தி. மிகப் பெரிய, பிரும்மாண்டமான சக்தி. பார்க்கறதுக்கு சாது மாதிரி இருக்கில்லையா? ஆனா அதனோட சக்தி அபரிமிதமானது. கடல் பொங்கறதுன்னு கேள்விப்பட்டிருக்கீங்களா?...''

''ஆமா சார், புயல் வீசும்போது...''

''கரெக்ட். அப்ப தண்ணில உற்பத்தியாகிற சக்தி மின்சாரத்தைவிடப் பல மடங்கு பெரிசு. நாம கடலைப் புரிஞ்சுக்கணும்னா, ஒண்ணு தண்ணியாவே மாறணும் மனசுக்குள்ள. அல்லது மீனா மாறணும்.''

''மீனா மாறுவதா! அதெப்படி?'' என்றான் பாலு.

''முதல்ல உடம்பைக் குறைச்சு நீச்சல் கத்துக்கணும் புள்ளையாரே!'' என்றார் வாத்தியார். பையன்கள் சிரித்தார்கள்.

பாலு திரும்பிப் பார்த்து முறைத்தான். ''நீங்க சொல்லுங்க சார்'' என்றான்.

''தண்ணீரோட சூட்சுமம் புரிஞ்சுக்கறது கொஞ்சம் கஷ்டம். படிக்கணும். பெரியவனானதும் மெரைன் பயாலஜி படிச்சீங்கன்னா புரியும்'' என்றவர், அங்கே எடுத்து வந்திருந்த ஒரு குண்டு புத்தகத்தைப் பிரித்து பாலுவிடம் காட்டினார். கொட்டை கொட்டை எழுத்துகளில் கடலின் இயல்புகளை இரண்டு இரண்டு வரிகளில் அழகாக, மாணவர்களுக்குப் புரியும் விதத்தில் அதில் விளக்கி எழுதப்பட்டிருந்தது.

பாலு ஆர்வமுடன் அந்தப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு தனியே போனான்.

சரியாக ஐம்பது நிமிடம் ஆனபோது எதிரே கரை தென்பட்டது.

''பாய்ஸ்! பன்றித் தீவு வந்தாச்சு. இறங்கணும்'' என்று மகாலிங்க வாத்தியார் குரல்




கொடுத்தார். மீண்டும் பையன்கள் ஓவென்று உற்சாகக் குரல் கொடுத்துக் கொண்டு தத்தம் பைகளை எடுத்துக் கொண்டு தயாராகப் படகின் விளிம்புக்கு வந்து நின்றார்கள்.

இன்றைய தினத்தை என் வாழ்நாளிலேயே மறக்க முடியாது என்று பாலு நினைத்துக் கொண்டான். அவனுக்கு அப்போது தெரியாது. அன்றைய தினம் மட்டுமல்ல; அடுத்து வரப்போகிற பத்து நாட்களையும் கூட அவனால் உயிருள்ள வரை மறக்க முடியாமல் இருக்கப் போகிறது என்று!

மகிழ்ச்சியுடன் அவன் பன்றித் தீவில் கால் வைத்தான். அங்கே அவனுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது!

(தொடரும்)



யார் சிறந்த நண்பன்?

டீ இன் ஒன் விளையாட்டு

40, 41ஆம் பக்கங்களில் உள்ள இந்த விளையாட்டு மிகவும் சுவாரசியமாக இருக்கும். மற்ற பிராணிகளுக்குத் தீங்கு செய்யாதவரே பிராணிகளின் சிறந்த நண்பன். மஞ்சள் கட்டங்கள் வழக்கம் போல் பகடை விளையாட்டில் பயன்படுத்துவது போல் அமைந்திருக்கிறது. சிவப்பு கட்டங்கள் வந்தவுடன் அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதுபடி செய்து காட்டிவிட்டு ஆட்டத்தைத் தொடர வேண்டும்.

2 முதல் 4 பேர் வரை விளையாடலாம். ஆளுக்கு ஒரு வண்ண பட்டன்களை எடுத்துக் கொள்ள வேண்டும். தாயம் போட்டு ஆரம்பியுங்கள். ஒரு முறைதான் ஒருவர் பகடையை உருட்ட வேண்டும்.



1. செடிக்குத் தண்ணீர் விடுவது நல்லது. எனவே 2 கட்டங்கள் முன்னேறவும்.
3. ஒரு ஜோக் சொல்லவும்.
5. நாயைக் குச்சியால் விரட்டுகிறீர்கள். 2 கட்டங்கள் பின்னே செல்லவும்.
7. குழந்தை போல் பேசுங்கள்.
9. பறவைகளுக்கு உணவிடுகிறீர்கள். நீங்களே தொடர்ந்து ஆடுங்கள்.
11. நாய் போல் குரைக்கவும்.
13. கழுதை மேல் பொதி அதிகம். ஓர் ஆட்டம் கிடையாது.
15. நான்கு வரி பாடவும்.
17. பூனையின் காயத்துக்கு மருந்திட்டு கட்டுப் போடுகிறீர்கள். 20க்குச் செல்லவும்.
19. திருக்குறள் ஒன்று சொல்லுங்கள்.
21. மாட்டுக்குப் புல் தருகிறீர்கள். ஒரு கட்டம் முன்னேறுங்கள்.
23. நடனம் ஆடவும்
25. கூண்டில் பறவை. 20க்குச் செல்லவும்.
27. ஆடு போல் கத்தவும்
28. வெற்றி...வெற்றி... நீங்களே சிறந்த நண்பன்.

பாலர் சித்திரை கலை விழா

ஸ்ரீ சுமுகி ராஜசேகரன் நினைவு அறக் கட்டளை ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் பாலர் சித்திரை கலை விழாவை நடத்தி வரு கிறது. இந்த ஆண்டு ஏப்ரல் 30, மே 1, 2 ஆகிய தேதிகளில் இக்கலை விழா நடைபெற இருக்கிறது. குழந்தைகளுக்குப் பாரம்பரிய கலைகளின் மேல் அதிக ஈடுபாடு வருவதற்காக இவ்விழா நடத்தப்படுகிறது. பள்ளியிலிருந்து கல்லூரி படிக்கும் மாணவர்கள் வரை யார் வேண்டுமானாலும் இதில் பங்கேற்கலாம்.

பரத நாட்டியம், கீர்த்தனை, சேர்ந்திசை, ஓவியம், பாரதியார் பாடல், பேச்சுப் போட்டி, கோலம், வாத்ய இசை, இலக்கியம், நாட்டிய நாடகம் போன்ற பிரிவுகளில் பல போட்டிகள் நடைபெறும்.

முன்பதிவு கட்டணம் செலுத்தி இதில் பங்கேற்கலாம். பங்கேற்பவர்களுக்கு சான்றிதழ் களும் பரிசுகளும் வழங்கப்படுகிறது. இவ் விழாவில் பங்கேற்போர் அனைவரும் பாவாடை, தாவணி போன்ற பாரம்பரிய உடைகளில் வர வேண்டும். உங்கள் திறமைகளை வெளிக்காட்ட நல்ல வாய்ப்பு.



படத்தை ஒன்று சேருங்கள்!



மேலே கொடுக்கப்பட்டுள்ள படத்தை சற்றுத் தடிமனான தாளில் வெட்டி ஒட்டுங்கள். பிறகு இந்தப் படத்தை ஒரே அளவின்றி, தாறுமாறாக சிறுசிறு துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்ளுங்கள். இந்தத் துண்டுகளை வைத்து முழு கிளியை உருவாக்குங்கள். யார் எவ்வளவு விரைவில் ஒன்று சேர்ப்பது என்று போட்டி வைத்து விளையாடுங்கள்.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவு கதைப் போட்டி


கதை எழுத ஆர்வமுள்ளவர்களுக்கு, இதோ ஒரு மகிழ்ச்சியான செய்தி! சிறுவர் இலக்கியம் செழிக்கத் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட அழ. வள்ளியப்பா, கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியர். அவர் நினைவாக இந்த ஆண்டும் போட்டி அறிவிப்பதில் கோகுலம் பெருமை கொள்கிறது.

1. இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+2 உட்பட) மட்டுமே கலந்து கொள்ளலாம்.
2. கதைகள் சிறுவர்களுக்கானதாக இருக்க வேண்டும். நகைச்சுவை, துப்பறிதல், சமூகம், வரலாறு, அறிவியல் என எதைப் பற்றி வேண்டுமானாலும் இருக்கலாம். சொந்தக் கற்பனை என்ற உறுதி மொழியுடன் அனுப்ப வேண்டும்.
3. வெள்ளைத் தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதலாம். கையெழுத்து தெளிவாகப் புரியும்படி இருக்க வேண்டும்.
4. பரிசு பெறாத, பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகளை ஒட்டிய உறையை கதையுடனேயே இணைக்க வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை. இது குறித்து எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
5. இதில் கலந்து கொள்ள கட்டணம் ஏதும் இல்லை. ஒருவரே எத்தனை கதைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
6. கதைகளை முதல் முறை வெளியிடும் உரிமை கோகுலத்திற்கே உண்டு. பிறகு இதன் உரிமை முழுவதும் ஆசிரியருக்கே.
7. முடிவு தேதி 31.5.2004. இதற்குப் பின் வருபவை பரிசீலனைக்கு ஏற்கப்பட மாட்டா.
8. அயல்நாட்டில் உள்ளவர்கள், இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கட்டாயம் தர வேண்டும்.
9. கதைகளை 'ஆசிரியர், கோகுலம், 47, N.P. ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097' என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல் 'அழ. வள்ளியப்பா நினைவு கதைப் போட்டி' என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.
10. போட்டி குறித்து எழும் எவ்விதப் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் எடுக்கும் தீர்ப்பே முடிவானது.



முதல் பரிசு - ரூ. 500/-
இரண்டாம் பரிசு - ரூ. 300/-
மூன்றாம் பரிசு - ரூ. 200/-

அழகான கரடி!



கடிதங்கள்

அட்டைப் படக் கரடி அழகோ அழகு! 'பிரதர் பேர்' படத்தைப் பார்க்க ரொம்ப ஆர்வமாக இருக்கிறேன். விடுமுறை நேரத்தில் நல்ல படத்தை எங்களுக்கு அறிமுகப் படுத்தியிருக்கிறீர்கள். நடுப்பக்க விளையாட்டு 'சரியா, தவறா?' ரொம்பவே சுவாரசியமாக இருந்தது.

- வேல்விழி,
ஒன்பதாம் வகுப்பு,
அ.உ.பெ.மே.நி.பள்ளி,
இராமேஸ்வரம்

இராமநாதபுரம் மாவட்டச் சிறப்பிதழ் பிரமாதம்! இராமநாதபுரம் மாவட்டத்தில் வசிக்கும் எனக்கே பல தகவல்கள் புதிதாக இருந்தன. விளையாட்டு நன்றாக இருந்தது. இது போன்ற விளையாட்டுகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

- சு. மதிவாணன்,
பத்தாம் வகுப்பு,
தங்கச்சிமடம்,
இராமநாதபுரம் மாவட்டம்



மந்திர ஜாலம் சிறுகதை செம விறுவிறுப்பு. ஏதேனும் படிப்பினை போட்டு முடித்திருந்தால் நூற்றுக்கு நூறு கொடுக்கலாம். இப்பொழுது 99 மதிப்பெண்தான்! புதையல் தீவு புதிய தொடர் கதையை ஆவலாக எதிர் பார்க்கிறேன்.

- ஆர். ஜி. உமா,
திசையன் விளை

நெட்பிட்ஸ் பகுதியில் ஒரு புலி நிற்பதை வெகு நேரம் உற்றுப் பார்த்த பிறகே காண முடிந்தது. மணற்சிற்பம் புகைப்படம் அருமை. அரிய புகைப்படங்களை வெளியிடுவதில் கோகுலத்துக்கு நிகர் கோகுலமே! பரிசுப் போட்டி முடிவு பகுதியில் கேள்வி எண் 6க்கு உரிய பதிலை வெளியிடவில்லை. அதைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

- சே. நம்பி கிருஷ்ணன்,
ஒன்பதாம் வகுப்பு,
டி.வி.எஸ். அரசு மேல்நிலைப் பள்ளி,
திருக்குறுங்குடி,
திருநெல்வேலி மாவட்டம்.

நம்பி கிருஷ்ணன், பதில் விடுபட்டு விட்டது. தாங்கள் சுட்டிக் காட்டியதுக்கு



நன்றி. அது ஸ்விட்சர்லாந்து கொடி. - ஆர்

துரோகி யார்?

துரோகி யார்? கதை விரைவில் முடிந்து விட்டது. ஒவ்வொரு அத்தியாயத்திலும் யார் துரோகி? என்று ராஜு மட்டும் நினைக்கவில்லை; நாங்களும் தான்! மிகவும் விறு விறுப்பான தொடர்கதை.

- எம். கோகிலா,
திருச்சி

அருமையான நண்பர்களைச் சந்தேகப்பட்ட ராஜுதான் துரோகி என்பதை அழகாக சொல்லியிருக்கிறார் அருண் சரண்யா. படங்களும் நன்றாக இருந்தன.

- கே.ராஜஸ்ரீ,
அ.உ.நி.பள்ளி,
மேட்டுப்பாளையம்


1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
ஆரம்பம்

யார் சிறந்த நண்பன்?

– டூ இன் ஒன் விளையாட்டு



விளக்கம் 36ஆம் பக்கம்

இதயத்திற்கு இதமான

ஹலோ சுகமா?

● இல.குணசேகரன், புதுச்சேரி

? பெண்களுக்குத் தலையில் வழுக்கை விழுவதில்லையே, ஏன்?

! ஆண்களுக்கு 'டைஹைட்ரோ டெஸ்டோஸ்டீரோன்' (Dihydrotestosterone) எனும் இயக்குநீர் மிகுதியாகச் சுரக்கும்போது வழுக்கை விழுகிறது. ரத்தத்தில் இருக்கும் இந்த இயக்குநீர் வேர்க்கால்களை அடைந்து, ஒருவித ஒவ்வாமையை உண்டாக்குகிறது. இதனால் முடிவேர்கள் சுருங்கி, வலுவிழந்து, உதிரத் தொடங்குகின்றன. இந்த இயக்கு நீரின் ஆதிக்கம் பெண்களுக்கு இல்லை என்பதால் அவர்களுக்கு அவ்வளவாக வழுக்கை விழுவதில்லை.

● எம். வினோத், சங்கரன்கோவில்.

? சளி பிடித்திருக்கும்போது ஐஸ் கிரீம் சாப்பிடலாமா, டாக்டர்? தரமான ஐஸ்கிரீம்களைச் சாப்பிட்டால் சளி பிடிக்காது என்று படித்தேன். இது சரியா?

! ஐஸ்கிரீம் போன்ற குளிர்ச்சியான உணவுப் பொருள்களைச் சளி பிடித்திருக்கும்போது சாப்பிட்டால் சளிக் கிருமிகளுக்குக் கொண்டாட்டம் வந்துவிடும். இதனால் சளி அதிகமாகி விடும். தவறு, ஐஸ்கிரீமில் இல்லை. அதன் குளிர்ச்சியில் உள்ளது.

● ரா.வினோத்குமார், காரைக்கால்.

? தண்ணீரைக் கொதிக்க வைத்துக் குடித்தால் அதில் உள்ள சத்துகள் எல்லாம் போய்விடும் என்பது உண்மையா, டாக்டர்?

! உண்மையில்லை. தண்ணீரைக் கொதிக்க வைப்பதால் அதிலுள்ள சத்துகள் குறையாது. இந்தியா போன்ற சுகாதாரம் குறைவாக உள்ள நாடுகளில் தண்ணீரைக் கொதிக்க வைத்துக் குடிப்பதுதான் உடல் நலனுக்கு நல்லது. குறிப்பாக, குழந்தைகளைத் தாக்கும் வாந்தி, வயிற்றுப் போக்கு, சீதபேதி, மஞ்சள் காமாலை, டைபாய்டு, குடல்புழுத் தொல்லை, காலரா போன்ற பல நோய்கள் சுகாதாரக் குறைவான தண்ணீரைக் கொதிக்க வைக்காமல் அப்படியே குடிப்பதால்தான் ஏற்படுகின்றன.

● ஈரோடு அருண், ஈரோடு.


? இதயத்திற்கு இதமான எண்ணெய் எது?

! சமையல் எண்ணெயில் திண்மக் கொழுப்பு அமிலம், ஒற்றை நீர்மக் கொழுப்பு அமிலம், பலவகை நீர்மக் கொழுப்பு அமிலம் ஆகிய மூன்றும் 1:3:5 என்ற அளவில் இருக்க வேண்டும். அப்போதுதான் இதயத்தின் இயல்பான இயக்கத்திற்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது. ஆனால் இப்போது பயன்படுத்தப்படும் எண்ணெய்களில் இந்த விகிதத்தில் எந்த எண்ணெயும் இல்லை. எனவே எந்த ஒரு எண்ணெயையும் குறிப்பிட்டு இதுதான் இதயத்திற்கு இதமானது



டாக்டர் கு.கணேசன்

எண்ணெய் எது?



என்று கூறிவிட இயலாது. இந்த விகிதத்தில் கொழுப்பு அமிலங்கள் கிடைப்பதற்கு ஏதுவாக பலவித எண்ணெய்களைத் தேர்ந்தெடுத்து, அளவோடு பயன்படுத்தலாம். எடுத்துக் காட்டாக, உணவை வறுப்பதற்குக் கடலை எண்ணெய், தாளிக்க நல்லெண்ணெய், (இரண்டு எண்ணெய்களும் சேர்ந்து நாளொன்றுக்கு 30 மி.லி.க்கு மிகாமல் இருக்க வேண்டும்.) சுவைக்கும் மணத்திற்கும் நாளொன்றுக்கு ஒரு தேக்கரண்டி நெய் (5 மி.லி) என்ற அளவில் பயன் படுத்தினால் கொழுப்பு அமிலங்கள் மிகாது; இதயத்திற்கும் நல்லது.

புதிர் இங்கே! விடை கீழே!

1. நகம் எந்த வகையைச் சார்ந்தது?
   அ. தோல் ஆ. எலும்பு இ. குருத்தெலும்பு

2. மனித உடலின் மிகப் பெரிய உறுப்பு எது?
   அ. கல்லீரல் ஆ. தோல் இ. குடல்

3. மனிதனின் குள்ளத் தன்மைக்கு எது காரணம்?
   அ. சத்துக்குறைவு ஆ.இயக்குநீர் குறைவு இ. பரம்பரை

4. மாரடைப்பிற்குக் காரணம் கண்டறிய உதவும் பரிசோதனையின் பெயர் என்ன?
   அ. ஆஞ்சியோகிராம்
   ஆ. கார்டியோகிராம்
   இ. எலெக்ட்ரோம யோகிராம்

5. ரத்த வகையில் Rh பண்பு எந்த விலங்கிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது?
   அ. முயல் ஆ. குரங்கு
   இ. ஆடு

விடை இங்கே!

1. இ 2. ஆ 3. ஆ
4. அ 5. ஆ

ஓவியப் போட்டி

கோடை வெயில் எப்படி சுட்டெரிக்கிறது! வெயிலுக்கு இதமாக தர்பூசணியைச் சாப்பிட்டு தாகத்தைத் தணித்துக் கொள்ள வேண்டியதிருக்கிறது. இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: **தர்பூசணி.** தர்பூசணி கொடியில் படரலாம்; குவித்து அடுக்கப்பட்டிருக்கலாம்; வெட்டிச் சாப்பிடுவது போல் இருக்கலாம்... இப்படி எப்படி வேண்டுமானாலும் உங்கள் கற்பனைக்கேற்றவாறு வண்ணத்தில் வரைந்து அனுப்பலாம். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி : **8.05.2004**

கிளித் தலை இளவரசி!

3 கதை : குறும்பலாப்பேரிப் பாண்டியன் படம் : லலிதா




இசைவேந்தன் பொன்னகரத்தை நோக்கிப் பயணமானான்.
பொன்னகர அரண்மனையில்...
இசைவேந்தா, உன் தாத்தாவை நாடு கடத்தியதற்கு நான் மிகவும் வருந்துகிறேன்.
நடந்ததை மறந்து விடுவோம் அரசே!
பெரிய மனதுடன் என் மகளைக் காப்பாற்ற வந்ததற்கு நன்றி. தங்க மாங்கனியுடன் வந்தால் நாடும், இளவரசியும் உனக்கே!
நன்றி அரசே! வெற்றியுடன் திரும்புவேன்.
இசைவேந்தன் கடற்கரையை அடைந்து, ஒரு மந்திரக் கண்ணாடியை எடுத்தான்.
மந்திரக் கண்ணாடியே, புதுவைப் பட்டணம் எந்தத் திசையில் இருக்கிறது என்று காட்டு.



கண்ணாடி புதுவைப் பட்டணத்தையும், அதை அடைய வேண்டிய வழியையும் காட்டியது.
பிறகு -
ம்... கடலில் கொந்தளிப்பு அதிகமாக இருக்கிறதே! படகில் செல்ல இயலாது.
இசைவேந்தன் மந்திரத்தைச் சொன்னான். அடுத்த நொடி ஒரு பெரிய திமிங்கிலம் கரைக்கு வந்தது.
வணக்கம் இசைவேந்தா. என்னை அழைத்த காரணம் என்ன?
நான்காயிரம் மைல் தொலைவில் இருக்கும் புதுவைப் பட்டணத்துக்கு என்னை அழைத்துச் செல்.


இரண்டு நாட்கள் கழித்து -
கடலில் கொந்தளிப்பு அதிகமாக இருக்கிறது.
ஆமாம். இன்னும் எத்தனை நாள் பயணம் செய்யணும்?
ஐந்தாம் நாள் காலை புதுவைப் பட்டணத்தை அடைந்து விடலாம்.
கடல் பயணம் சுவாரசியமாகவே இருக்கு.
ஐந்தாம் நாள் காலை -
இசைவேந்தா, எப்பொழுது வேண்டுமானாலும் என் உதவியை நீ நாடலாம். வருகிறேன்.
நன்றி. திமிங்கில அரசனே! விரைவில் சந்திப்போம்.
இசைவேந்தன், மந்திரத்தால் வெள்ளைக் குதிரையை வரவழைத்து அரண்மனை நோக்கிச் சென்றான்.
யார் நீ? எங்கே போகிறாய்?
நான்....
(தொடரும்)







கடல் வெள்ளரி

கடலில் வாழும் பிராணிகளில் ஒன்று கடல் வெள்ளரி. நட்சத்திர மீன், கடல் முள்ளெலி, கடல் லில்லி போன்றவை கடல் வெள்ளரியின் உறவினர்கள். என்கைனொடெர்மேட்டா என்னும் முள்தோலித் தொகுதியில் ஹாலொதுராய்டியா என்ற வகுப்பைச் சேர்ந்தது கடல் வெள்ளரி.

கடல் வெள்ளரியின் உடல் நீண்டு, உருண்டு பார்ப்பதற்கு வெள்ளரிக்காய் போல் தோன்றும். உடலைச் சுற்றி தடித்த ஓடு இருக்கும். உடலின் மேல் பகுதியில் வாய் இருக்கும். இந்த வாயைச் சுற்றிலும் வட்டமாகப் பற்றுக் கொம்புகள் வளர்ந்து இருக்கும். ஒவ்வொரு பற்றுக் கொம்பும் சிறு மரம் போல் பல கிளைகளுடன் காணப்படும். இந்தப் பற்றுக் கொம்புகளை நீட்டியும், சுருக்கியும் கடல் வெள்ளரி இரை பிடிக்கும். 8 பற்றுக் கொம்புகள் சிறியதாகவும், 2 கொம்புகள் பெரியதாகவும் இருக்கும்.


கடல் வெள்ளரியில் ஏறக் குறைய 1,150 இனங்கள் உள்ளன. இவை எல்லாக் கடல்களிலும் வாழ்கின்றன. கடலின் ஆழத்தில் மண், சகதிகளில் சில இனங்கள் வசிக்கின்றன. மேலும் பல இனங்கள் பவளப் பாறைகள், பாறைகளில் வாழ்க்கை நடத்துகின்றன. மண், பாறைகளுக்கு ஏற்றவாறு எளிதில் கண்டுபிடிக்க முடியாதபடி உடலின் நிறத்தைப் பெற்றிருக்கின்றன கடல் வெள்ளரிகள். எனவே இவை எதிரிகளின் கண்களில் இருந்து சுலபமாகத் தப்பி விடுகின்றன.

கடலில் இருக்கும் சின்னஞ்சிறு உயிர்களே கடல் வெள்ளரியின் உணவு. இவை அழுக்குகளைச் சாப்பிட்டு, கடலை சுத்தம் செய்கின்றன.

எதிரிகள் கடல் வெள்ளரியைப் பிடிக்க வரும் போது தன் வயிற்றில் உள்ள குடலை வெளியே தள்ளி, எதிரிகளைத் திருப்திபடுத்திவிட்டு, தப்பிச் சென்று விடும். மீண்டும் புதிதாக குடல் பகுதி வளரும்.


மிகச் சிறிய அளவிலிருந்து 2, 3 அடி நீளம் வரை கூட கடல் வெள்ளரிகள் காணப்படுகின்றன. கடல் வெள்ளரிகள் இடம் விட்டு இடம் செல்லக் கூடியவை; ஆனால் மிகவும் மெதுவாகவே செல்ல முடியும்.

\- எஸ். சுஜாதா



1000/- ரூபாய் பரிசு!

இந்த மாதப் போட்டி






உங்களுக்கு மிகவும் பிடித்த இந்தப் போட்டியில் பங்கேற்பது சுலபம். இதுவரை நிறையப் பேர் பரிசு வாங்கியிருக்கிறார்கள். பரிசு கிடைக்காதவர்கள் மனம் தளர வேண்டாம். நிச்சயமாகப் பரிசு கிடைக்கும். இங்கே கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்குச் சரியான பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து எழுதுங்கள். பெற்றோர் கையொப்பத்துடன், முகவரி கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். உங்கள் முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிடுங்கள். மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி **20.05.2004.**

பர்மா

1. தலைநகரம் ____________
2. முக்கிய இடம் ____________
3. மொழி ____________
4. கரன்ஸி ____________
5. பிரபலமான விளை பொருள் ____________



6. இது எந்த நாட்டுக் கொடி?



ஆசிரியர்,
கோகுலம்,
கல்கி பில்டிங்கஸ்,
47-NP, ஜவாஹர்லால்
நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

கின்னஸ் ரத்த தானம்!

மிக்ஸர் பிட்ஸ்

ஆஸ்திரேலியாவில் ஆண்கள் அதிகம். பெண்கள் குறைவு. அதனால் மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாருக்கு 2000 டாலர் வரதட்சிணை கொடுத்தே பெண்ணை



மணம் முடித்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பிடி வைக்கோலை வீட்டு வாசலில் செருகி வைத்திருப்பார்கள் அயர்லாந்து மக்கள். நாய்கள் ஜாக்கிரதை என்று அர்த்தம் இதற்கு.

- ஏ.ஜி.முகம்மது தௌபீக்,
மேலப்பாளையம்

ஒட்டகச்சிவிங்கி நாக்கின் நீளம் சுமார் ஒன்றரை அடி! தென் ஆப்பிரிக்காவில் மட்டுமே காணப்படும் ஒட்டகச்சிவிங்கியின் உயரம் சாதாரணமாக பதினெட்டு அடி! இதனால் ஒட்டகச்சிவிங்கி இருபது அடி உயரத்தில் உள்ள இலைகளைக் கூட, தரையில் நின்று கொண்டே பறித்து தின்னும்.

- கு. அருணாசலம்,
தென்காசி



உலகிலேயே வேகமான மொழி 'ஃபிரெஞ்ச்'தான். அம்மொழியில் ஒரு நிமிடத்துக்கு 350 வார்த்தைகள் பேசலாம். ஜெர்மனி 250 வார்த்தைகள். ஆங்கிலம் 220 வார்த்தைகளும் பேச முடியும் என்று கணக்கிட்டுள்ளனர்.

- ஆர்.ஆர். பூபதி,
திண்டுக்கல்

தையற்சிட்டு என்ற பறவை செய்யும் கூடு மிகவும் வித்தையானது. நீண்ட கூர்மையான அலகினால் இப்பறவை பெரிய இலை



வண்டுகள் மலர்களின் மீது அமரும். அம்மலர்களில் உள்ள மகரந்தத் துகள்கள் அவற்றின் கால்களில் ஒட்டிக் கொள்ளும். மற்ற மலர்களின்மீது அவ் வண்டுகள் அமரும்போது மகரந்தச் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். இது தெரிந்த விஷயம். ஆனால், ஒரு குறிப்பிட்ட வகை வண்டுகள் வேடிக்கையான முறையில் மகரந்தத் துகள்களைக் கடத்துமாம். இவ்வகை வண்டுகள் மலர்களின்மீது அமராது. மாறாக மலர்களின்மீது பறக்கும்போது மிக அதிக எண்ணிக்கையில் ஒலி அதிர்வுகளை எழுப்பும். இதனால் மகரந்தங்கள் மேலெழும்பி வண்டுகளின் உடல் முழுவதும் ஒட்டிக் கொள்ளும்.




சுறா மீனின் வயிற்றுக்குள் எந்த உணவு சென்றாலும் ஏறக்குறைய ஒரு மணி நேரத்தில் ஜீரணம் ஆகிவிடும். இவற்றின் வயிற்றில் சுரக்கும் ஜீரண நீர்கள் அதிக வீரியத்தோடு இருப்பதே இதற்குக் காரணம். அதன் ஜீரண நீர்கள் வெளியே எடுக்கப்பட்டு ஒரு மனிதனின் மேல் பட நேர்ந்தால் பட்ட இடம் தீய்ந்து பொசுங்கிப் போய் விடக் கூடிய அளவு வீரியம் வாய்ந்தது. அடர் நைட்ரிக், ஹைட்ரோ குளோரிக் அமிலங்களைக் காட்டிலும் மிகவும் வீரியமானவை.

- கோ. செந்தமிழ்ச் செல்வி,
காஞ்சிபுரம்

மென்மையான புல், கம்பளி, நூல் முதலியவற்றை இட்டு கூட்டை செம்மைப்படுத்துகிறது. இது உரத்த குரலில் 'டுவிட், டுவிட், டுவிட்' என அடிக்கடி கத்திக் கொண்டிருக்கும்.

- சு. கண்ணகி,
மிட்டூர்



களின் ஓரத்தில் துளையிட்டு அவற்றில் தாவரங்களின் நாரைக் கோத்து எடுத்து ஒரு பை போலத் தைத்து விடுகிறது. இவ்வாறு அமையும் இலைப் பையின் உட்புறத்தில்

ஜப்பானில் சு.தோக்கு என்ற மன்னர் புத்தரைப் பற்றி 135 பக்கங்கள் கொண்ட ஒரு நூலை தன் உடல் இரத்தத்தைக் கொண்டு எழுதினார்.

- கே.என்.மகாலிங்கம்,
பாண்டிச்சேரி




ஜேம்ஸ் ஹாரிசன் என்பவருக்கு, 15 வயதில் ரத்தம் செலுத்தப்பட்டு புத்துயிர் அளிக்கப்பட்டது.

இப்பொழுது அவருக்கு வயது 51. இதுவரை ஆஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கத்திற்கு 800 முறை ரத்ததானம் செய்துள்ளார்.

அவர் கொடுத்த இரத்தத்தின் மொத்த அளவு 480 லிட்டர்கள். இது உலக சாதனையாக 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

- ஞா. மாடசாமி, சென்னை



பிறகு வேறு மலர்கள்மீது பறக்கும் போது அம் மகரந்தங்கள் உதிர்ந்து மகரந்த சேர்க்கைக்கு வழி வகுக்கும்.


- என். ஜரினாபானு,
திருப்பட்டினம்






கண்டுபிடி... கண்டுபிடி...

கோடை விடுமுறைப் போட்டி-1




இங்கு உங்களுக்கு நன்கு அறிமுகமான படங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. இவற்றை நீங்கள் சற்று ஆழமாக உற்று நோக்கினால் சுலபமாகக் கண்டுபிடிக்கலாம். உங்களுக்கு மேலும் சுலபமாக்க ஒரு குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. இவை என்ன என்பதைக் கண்டுபிடித்து எழுத வேண்டும். அத்துடன் முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப்புங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். சரியான விடை எழுதிய 10 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி: 15.5.2004.

1. ரத்தம் செல்லாத நரம்புகள்
2. பிராணியின் கவசம்
3. வானில் தெரியாது இந்த நட்சத்திரம்
4. பறப்பதற்கு முன்...
5. நோய் எதிர்க்கும் சக்தி உண்டு
6. பெட்டி நிறைய ரத்தினம்
7. புதிய உயிர் உருவாகும்
8. சிட்ரிக் ஆசிட் சுவை









5




6




7





8



4

ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு
சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.



காசு கொடுக்கும்

காசிக்கு அருகில் உள்ள கிராமத்தில் மகாதேவ சர்மா என்ற ஏழை வசித்து வந்தார். அவரது குடும்பம் மிகவும் வறுமையில் வாடியது.

திரும்பி வரும் வழியில் ஒரு துறவியைச் சந்தித்தார். துறவி அவரைப் பற்றி விசாரிக்க, தன் கஷ்டங்களை யெல்லாம் சொல்லி அவரிடம் வருத்தப்பட்டார். தன்னிட மிருந்த ஒரு சங்கை எடுத்து மகாதேவ சர்மாவிடம் கொடுத்தார். "அப்பா! இது தெய்வீக சங்கு. தினமும் இறைவனுக்குப் பூஜை செய்துவிட்டு முடிவில் இந்தச் சங்கை தலைகீழாகத் திருப்பினால் தினமும் ஒரு தங்க நாணயம் கிடைக்கும். இதைக் கொண்டு நீ உன் குடும் பத்தை சிரமமின்றி நடத்துவாயாக!" என்று சொன்னார். துறவி கொடுத்த சங்கைப் பெற்றுக் கொண்ட மகாதேவசர்மா மனம் மகிழ்ந்தார். துறவிக்கு தன் வந்தனங்களையும், நன்றியையும் தெரிவித்து விட்டு வீடு திரும்பலானார். அதற்குள் மாலை மங்கி இருள் சூழ ஆரம்பித்துவிட்டது. இரவு ஊருக்குத் திரும்ப முடியாது. ஏனெனில் வழியில் ஒரு சிறிய காடு இருந்தது. எனவே இரவு தங்கிவிட்டு காலையில் தன் பயணத்தைத் தொடரலாம் என்று எண்ணி அன்று இரவு தங்குவதற்கு ஏதேனும் வீடு தென்படுகிறதா என்று பார்த்துக் கொண்டே வந்தார்.

தொலைவில் ஒரு வீடு தென்பட்டது. வேகமாக நடந் தார். அந்த வீட்டிற்குச் சென்று, தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டு அன்று இரவு அவரது வீட்டில் தங்கிக் கொள்ள அனுமதி கேட்டார். அந்த வீட்டுக்காரர் ஒரு வியாபாரி. அவரும் "சரி, இன்று இரவு நீங்கள் எங்கள் வீட்டிலேயே தங்கலாம்" என அனுமதி கொடுத்தார். இரவு வெகுநேரம் இருவரும் பேசிவிட்டு, பிறகு உறங்கிவிட்ட னர். மறுநாள் காலை மகாதேவ சர்மா எழுந்து வியா பாரிக்கு நன்றி கூறிவிட்டு தன் சங்குடன் கிளம்பினார்.



வீடு வந்து சேர்ந்த சர்மா தன் மனைவியிடம் முதல் நாள் நடந்த விவரங்களை ஒன்று விடாமல் கூறினார். விசாலமும் எல்லா விஷயங்களையும் கேட்டு மகிழ்ச்சி அடைந்தாள். குளித்துவிட்டு வந்த சர்மா மகிழ்ச்சியுடன் பூஜை செய்ய ஆரம்பித்தார். பூஜையை முடித்து, துறவி சொன்னபடி சங்கைத் தலைகீழாக திருப்பி ஆவலுடன் பார்த்தார். ஆனால் தங்க நாணயம் ஏதும் விழவில்லை. உடனே அவருக்குச் சந்தேகம் வந்தது. 'ஆம். நான் நேற்று இரவு அந்த வியாபாரியிடம் துறவி கொடுத்த சங்கைப் பற்றியும் சொன்னேனே! அவர்தான் ஏதாவது செய்திருக்க வேண்டும்' என்று வியாபாரியின்மீது சந்தேகப்பட்டார்.

உடனே, "விசாலம்! நான் போய் அந்த வியா பாரியைப் பார்த்து கேட்டு விட்டு வருகிறேன்" என்று வேகமாகப் புறப் பட்டார். தடுத்து நிறுத்தி னாள் விசாலம். "இருங் கள்! அவசரப்படாதீர்கள்! மூன்று நாள் கழித்து நான் சொன்னபடி செய்யுங்கள்" என்றாள். "சரி" என்று சம்மதித்தார் சர்மா. மூன்று நாட்கள் கழித்து விசாலம் சர்மாவிடம் வந்தாள். "நீங்கள் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? இரவு அந்த வியா பாரியின் வீட்டுக்கே

சங்கு!

ஆர்.சாரதா

செல்லுங்கள். பழைய சங்கைப் பற்றி ஒன்றும் சொல்லாதீர்கள். துறவியை மீண்டும் சந்தித்ததாகவும், அவர் தன்மீது இரக்கம் கொண்டு இன்னொரு சங்கு கொடுத்திருப்பதாகவும் சொல்லுங்கள். இந்தச் சங்கு தினமும் இரண்டு தங்க நாணயம் தரும் என்றும் சொல்லுங்கள். அப்புறம் நடப்பதைப் பாருங்கள்'' என்றாள்.

மனைவி சொன்ன படியே இரவு வியாபாரியின் வீட்டுக்குச் சென்றார். மறுபடியும் சர்மாவைப் பார்த்ததும் வியாபாரிக்கு என்ன செய்வதென்றே



தெரியவில்லை. வியர்த்தது. ஆனால் சர்மாவோ ஒன்றையும் கவனிக்காதவர் போல, வியாபாரியிடம் சொல்ல ஆரம்பித்தார். ''ஐயா! அன்று வந்துவிட்டு போனேன் இல்லையா! உடனே திரும்பவும் அந்தத் துறவி என்னைக் கூப்பிட்டனுப்பினார். இன்னொரு சங்கு கொடுத்திருக்கிறார். இது தினமும் இரண்டு தங்க நாணயம் தருமாம். இத்தோடு என் வறுமை நீங்கிற்று'' என்று சொல்லிக் கொண்டே, ''ஐயா! அன்று என்னைத் தங்க அனுமதித்தது போல இன்றும் இங்கு தங்கிச் செல்ல தாங்கள் அனுமதிக்க வேண்டும்'' என்றார். வியாபாரிக்கு ரொம்ப சந்தோஷம்.


இரவு 12 மணி. வியாபாரி மெல்ல எழுந்தார். சர்மா பக்கத்திலிருந்த பையிலிருந்து சங்கை எடுத்துக் கொண்டு அதற்குப் பதிலாக அன்று எடுத்துக் கொண்ட பழைய சங்கை வைத்துவிட்டு ஓசைப் படாமல் சென்று படுத்துக் கொண்டார்.

பொழுது புலர்ந்தது. சர்மா வியாபாரியிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினார்.

வீட்டிற்கு வந்தார் சர்மா. குளித்துவிட்டு பூஜை செய்தார். பூஜை முடிந்து சங்கை தலை கீழாக கவிழ்த்தார். துறவி சொன்னபடி ஒரு தங்க நாணயம் வந்தது. மனைவியிடம் காண்பித்தார்.

விசாலத்திற்கும் தன் யோசனை கை கூடியதில் மகிழ்ச்சி. அதன்பிறகு சர்மா குடும்பம் வளமாக வாழ்ந்தது. அங்கு வியாபாரி தன் வீட்டில் சங்கை தலைகீழாக கவிழ்க்க ஒன்றும் வரவில்லை. சங்கை நன்றாகப் பார்த்தார். தன்னுடைய சங்கே மீண்டும் தன்னிடம் வந்துவிட்டதை அறிந்தார். பிறர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது என்றும் புரிந்து கொண்டார்.

அழகு நிறைந்த தாஜ்மஹால்



பழமை, பெருமை தாங்கிய
பார தத்தில் ஓங்கிய
அழகு நிறைந்த தாஜ்மஹால்
ஆக்ரா நகரில் உள்ளதே!

மன்னர் ஷாஜ கானுமே
மனைவி மும்தாஜ் நினைவிலே
என்னே அழகு மிக்கதாய்
எடுத்துக் கட்டி இருக்கிறார்!

வெள்ளைச் சலவைக் கற்களால்
வியக்கும் வண்ணம் எழுப்பிய
உள்ளம் கொள்ளை கொண்டிடும்
உலகின் சிறந்த அதிசயம்!

உயர்ந்த 'குர்ஆன்' மறையினை
உள்ளே சுவரில் ஏந்தியே
நயமாய் நிற்கும் கட்டடம்
நாட்டில் இதுபோல் இல்லையே!

புதிர் உலகம்

யார் முதலில் வருவார்?

I. மரகதம், மல்லிகா, மாலா மூவரும் நெருங்கிய தோழிகள். மூவரும் கணிதத் தேர்வு எழுதினார்கள். மல்லிகா மாலா வாங்கியதை விட மூன்று மதிப்பெண் அதிகமாகப் பெற்றாள். மரகதமோ மல்லிகா, மாலா இருவரும் மொத்தமாகப் பெற்றதை மதிப்பெண்ணாகப் பெற்றாள். அப்படியெனில், மூவரின் மதிப்பெண்களைக் கண்டுபிடியுங்கள் பார்ப்போம்.

- பா. கவிதா,
புதுடெல்லி

II. என்னுடைய கடிகாரம் 10 நிமிடங்கள் மெதுவாக ஓடுகிறது. ஆனால் நான் ஐந்து நிமிடங்கள் வேகமாக ஓடுவதாக நினைக்கிறேன். என் தோழியின் கடிகாரம் 5 நிமிடங்கள் வேகமாக ஓடுகிறது. ஆனால் அவள் 10 நிமிடங்கள் மெதுவாக ஓடுவதாக நினைக்கிறாள். நாங்கள் இருவரும் ஒரு நாள் 4 மணி பஸ்ஸிற்குச் செல்வதாக முடிவு செய்தோம். எங்களில் யார் முதலில் பேருந்து நிலையத்திற்கு வருவோம்?

- சு. மலையரசி,
பதினோராம் வகுப்பு,
நா.ம.அ.பெ.உ.நி. பள்ளி,
திருப்பத்தூர்

III. அந்தக் காலத்தில் காய்கறிகளை நிறுத்துக் கொடுத்தார்கள். இந்தக் காலத்தில் காய்கறிகளை எண்ணிக் கொடுக்கிறார்கள். 3 மிளகாய், 4 தக்காளிப் பழம், 10 கத்தரிக்காய், 3 வாழைக்காய் ஆகிய இருபது காய்களும் 10 ரூபாய் ஆகிறது. 3 வாழைக்காய் விலை 7 மிளகாய் விலைக்குச் சமம். 7 மிளகாய் விலை 6 தக்காளி விலைக்குச் சமம். 5 கத்தரிக்காய் விலைக்கு 4 வாழைக்காய் விலை சமம் என்றால் மிளகாய், தக்காளி, வாழை, கத்தரிக்காய் இவற்றின் விலை என்ன?

- சிவ. மணவழகி,
நீடாமங்கலம்

IV. ¼, ¾, ½ என்ற கிலோ அளவுள்ள 8 வெல்லக் கட்டிகள் உள்ளன. 3 பேருக்குச் சமமான முறையில் பங்கிட வேண்டும். உடைக்கவும் கூடாது கணக்கிலும் தப்பு செய்யக் கூடாது.

- தனசேகரன்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி, நல்லூர்,
திருவண்ணாமலை மாவட்டம்

V. அப்துல், ஆபிரகாம், இசக்கி மூவரும் நெல்லை எக்ஸ்பிரஸில் சென்னைக்குச் சென்றார்கள். இரவுச் சாப்பாட்டுக்கு அப்துல் 9 தோசையும் ஆபிரகாம் 15



தோசையும் கொண்டு வந்தார்கள். இசக்கி ஒன்றும் வாங்கி வரவில்லை. மூவரும் அந்தத் தோசைகளைச் சமமாகப் பங்கிட்டு உண்டனர். இசக்கி அவன் பங்குக்காக ரூ. 24 கொடுத்தான். அப்துலுக்கும், ஆபிரகாமிற்கும் அந்தப் பணத்தைப் பங்கிடுவதில் தகராறு.

எதிர் இருக்கையில் இதைக் கவனித்துக் கொண்டிருந்த கணக்கு வாத்தியார், 24 ரூபாயை இருவருக்கும் பங்கிட்டுக் கொடுத்து, விளக்கவும் செய்தார். அவர் பணத்தை எப்படி பங்கிட்டுக் கொடுத்தார்?

- ம. சந்தோஷ், மூன்றாம் வகுப்பு,
சிவகாசி அரிமா மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
சிவகாசி

VI. கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதில்கள் 4 எழுத்துகளில் இருக்கும். 'ன்' என்ற எழுத்தில் முடியும். எங்கே பதில்களைக் காணுங்கள்.

1. குளோரோஃபார்ம் என்னும் மயக்க மருந்தைக் கண்டுபிடித்தவர் ....
2. இந்தியாவில் எண்ணெய் மற்றும் நிலவாயு கழகத்தின் தலைமையிடம் அமைந்திருக்கும் இடம் ....
3. தென் பிராந்திய கடற்படையின் தலைமையகம் உள்ள இடம் ....
4. திருமணங்களைக் கட்டாயமாக பதிவு செய்யும் முறையை முதன் முதலில் அறிமுகப்படுத்திய நாடு ....
5. 'ஹீத்ரு' விமான நிலையம் உள்ள இடம் ....

- சா. கீதா, பத்தாம் வகுப்பு,
உமா மகளிர் உயர்நிலைப் பள்ளி,
திருச்சிற்றம்பலம்.



விடைகள்

I. மாலா 46, மல்லிகா 49, மரகதம் 95

II. என் தோழிதான் முதலில் வருவாள். நான் பஸ்ஸை விட்டு விடுவேன். நான் என் கடிகாரப்படி 4.05க்குச் செல்வேன். ஆனால் அப்பொழுது உண்மையான நேரம் 4.15. என் தோழி அவள் கடிகாரப்படி 3.50க்குச் செல்வாள். ஆனால் அப்போது சரியான நேரம் 3.45.

III.

மிளகாய் 30 பை x 3 =	0.90
தக்காளி 35 பை x 4 =	1.40
வாழை 70 பை x 3 =	2.10
கத்தரி 56 பை x 10 =	5.60
மொத்தம் 20	10.00

IV. ¾, ¼ = 1 கிலோ - 2 கட்டிகள்
¼, ¼, ½ = 1 கிலோ - 3 கட்டிகள்
¼, ¼, ½ = 1 கிலோ - 3 கட்டிகள்
மொத்தம் 8 கட்டிகள்

V. 24 தோசைகளைப் பகிர்ந்து, ஆளுக்கு 8 தோசைகள் சாப்பிட்டனர். இசக்கி அவன் சாப்பிட்ட 8 தோசைகளுக்கு ரூ. 24 கொடுத்துள்ளான்.


அப்துல்லும், ஆபிரகாமும் இந்த 24 ரூபாயை அவர்கள் வாங்கி வந்த தோசை விகிதத்தில் பங்கிடக் கூடாது (அதாவது 9 : 15 என்ற விகிதத்தில்)

ஆனால் ஆளுக்கு 8 தோசை சாப்பிட்டபடியால் மீதமானது அப்துல் தோசை 1, ஆபிரகாம் தோசை 7, இந்த 8 தோசைகளைத் தான் இசக்கி சாப்பிட்டது.

ஆகவே 1 : 7 என்ற விகிதத்தில்தான் 24 ரூபாயைப் பங்கிட வேண்டும். எனவே அப்துலுக்கு ரூ.3ம் ஆபிரகாமுக்கு ரூ. 21ம் கிடைக்க வேண்டும்.


VI. 1.சிம்சன் 2.டேராடூன் 3.கொச்சின் 4.ஸ்வீடன் 5.லண்டன்

ஜோடி சேருங்கள்


சிலந்தி 

தையற்
சிட்டு 


குளவி 

பீவர் 










வரைந்து பழகுங்கள்





சுண்டெலி தந்த

நம்பி ஓர் ஏழை வாலிபன். எங்கும் வேலை தேடிக் களைத்து சாவதென்று முடிவெடுத்தான். ஒரு குளத்தருகே அவன் வரும்போது சாமியார் ஒருவர் சாலையோரம் இறந்து கிடந்த ஒரு சுண்டெலியைக் காட்டி "தம்பி! புத்திசாலி இந்தச் சுண்டெலியை வைத்தும் சம்பாதிக்க முடியும். வாழ்க்கை ஒரு சவால். அதை ஜெயித்துக் காட்டு" என்று சொல்லிவிட்டுப் போனார்.

அந்தச் சுண்டெலியின் வாலைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு நடந்தான் நம்பி. சிறிது தூரம் சென்ற பின், ஒருவன் கையிலிருந்த பூனை துள்ளிக் குதித்து வந்து சுண்டெலியைப் பறித்துத் தின்றது.

நம்பி பிரமித்திருக்க பூனைக்கு உரியவன், "ஐயா! என் பூனை இரண்டு நாட்களாய் பால், சோறு எதையும் சாப்பிடவில்லை. இறந்து விடுமோ என்று என் தங்கை அழுது கொண்டிருக்கிறாள். மாமிச உணவு அதற்குத் தேவைப்பட்டிருக்கிறது என்பதைப் புரிய வைத்தீர்கள்! மிக்க நன்றி" என்றபடி அவனிடம் ஒரு வெள்ளிப் பணத்தைக் கொடுத்துச் சென்றான்.


அப்போது எதிரே வந்த ஒருவர் "காட்டு வழிதாண்டுகிறதுக்குள்ளே தாகம் உயிரை வாட்டுகிறது. ஒரு குளம், குட்டையைக் காணலயே" என்று தன் நண்பருடன் அங்கலாய்ப்பதைக் கேட்டான்.

அந்தக் காசுக்கு ஒரு பானையும், தட்டும், குவளையும் வாங்கினான். பானை நிறைய சுத்தமான நீரை எடுத்துக் கொண்டு காட்டுப் பாதையில் போய் உட்கார்ந்தான். போகிற வருகிற வழிப்போக்கர்கள் ஆளுக்கொரு காசு கொடுத்து தண்ணீர் வாங்கிக் குடித்தனர். தண்ணீர் வியாபாரம் செழிப்பாக நடந்தது.

ஒரு நாள் "நாளைக்கு ஐந்நூறு குதிரைகள் விற்பனைக்கு வரப் போகின்றன" என்று சிலர் பேசிக் கொண்டு போவதைக் கேட்டான்.

காட்டில் உள்ள புல் அறுப்பவர்களிடம் சென்று ஆளுக்குக் கொஞ்சம் முன் பணம் கொடுத்து, புல்கட்டு முழுவதையும் வாங்கிக் கொண்டான். மறுநாள் யாரும் புல்வெட்டாமலிருந்தால் புல்கட்டுக்கு அதிகப் பணம் தருவதாக ஒப்பந்தம் செய்து கொண்டான். மறுநாள் ஐந்நூறு குதிரைகளும் வந்தன. குதிரைகளுக்கு எங்குமே புல்கட்டு கிடைக்காததால் வியாபாரிகள் திணறினர்.

இளைஞன் ஐந்நூறு புல்கட்டுகளுக்



செல்வம்!

மாலதி


கும் ஆயிரம் வெள்ளிப்பணம் விலை பேசிக் கொடுத்தான். புல் வெட்டிகளுக்குச் சொன்னபடி பணம் கொடுத்தான். இதன் பிறகு நம்பிக்கு அதிக உற்சாகம் பிறந்தது.

துறைமுகத்தில் கப்பல் வந்து இறங்கியதும் மொத்தமாக விலை பேசி விடுவான். வாங்க வருபவர்களிடம் அதிக விலை சொல்லி விற்பான். கப்பல் வியாபாரிகளும் சிரமப்படாமல் பல இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு, போகும்போது பணம் வாங்கிக் கொள்வார்கள். இதனால் நம்பி விரைவில் செல்வந்தனாகிவிட்டான்.

அவனது நண்பன் துரை இதைக் கண்டு பொறாமை கொண்டான். நம்பி பணக்காரனானதைக் கேட்டறிந்து போலியாகப் பாராட்டினான்.

வீட்டிலே நுழைந்த சுண்டெலியை அடித்துத் தூக்கிக் கொண்டு நடந்தான். எதிரே வந்தவனின் பூனை தாவிப் பிடித்து எலியைத் தின்றது.


வந்தவன் கோபாவேசமாக, "அடே, மட்டி! என் பூனைக்கு உடம்பு சரியில்லை. அதற்கு எதிரே செத்த எலியைக் காட்டிக் கொண்டா வருகிறாய்?" என்று சண்டைக்கு வந்தான். நஷ்ட ஈடாக ஒரு வெள்ளிப் பணத்தைக் கொடுத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினான் துரை.



காட்டிலே பானை ஜலம் கொடுத்து பணம் சம்பாதித்து வந்தான். ஒரு முறை திறந்து மூடும்போது மேலேயிருந்து காக்கை எச்சமிட்டு விட்டது. அதை விரட்டக் கம்பை வீசியவன் குறி தவறி பானையில் பட்டு, பானை உடைந்து விட்டது! மறுநாள் புயல் அடிக்க, பாதசாரிகளே வரவில்லை! அந்த முயற்சியைக் கைவிட்டான் துரை.

அடுத்து புல் கட்டுகளை வாங்கிப் போட்டான். மறுநாள் குதிரைகள் வந்தன. ஒவ்வொன்றின் கழுத்திலும் கொள்ளுப் பைகள்! புல் கட்டுகளை நஷ்டத்திற்கு விற்றான் துரை.

புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக் கொண்ட கதையாக துரைக்கு ஒவ்வொன்றிலும் கிடைத்தது ஏமாற்றமே!



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ஓவியப் போட்டி, பொது அறிவுப் போட்டி, அனுபவங்கள், படக்கதைகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்குச் சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ______________________________

முகவரி : ______________________________

____

____

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை *'Gokulam Tamil'* என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்பவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

ஓட்டம் பிடித்த எதிரிகள்!

பிரபலங்களின் வாழ்வில்...

முதல் தரம்!

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா ஒரு திருமண விழாவுக்குச் சென்றிருந்தார். அவரை, வற்புறுத்தி சாப்பிடச் செய்தனர். கவிஞர் உணவில் சிலவற்றைத் தவிர்த்து சிலவற்றை மட்டும் உண்ணலானார். அருகில் நின்று உபசரித்தவர். "ஏன் கவிஞர் சரியாக சாப்பிடவில்லை? சாப்பாடு நன்றாக இல்லையா?'' என்று கேட்டார். "சாப்பாடு முதல் தரம். நான் இரண்டாம் தரம்'' என்று பதில் சொன்னார் கவிஞர். வீட்டில் முதலிலேயே சாப்பிட்டுவிட்டேன். இப்போது இரண்டாம் முறையாக இங்கே சாப்பிடுகிறேன் என்பதைத்தான் நகைச்சுவையாகக் குறிப்பிட்டார் கவிஞர்.

* அழ.வள்ளியப்பா



- ஆர். ராஜலட்சுமி,
கரூர்

தந்தி...

சர்தார் வல்லபாய் படேல் வழக்கறிஞராக இருந்தபோது ஒரு கொலை வழக்கில் திறமையாக வாதாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவருக்கு ஒரு தந்தி வந்தது. அவர் வந்த தந்தியைப் படித்துவிட்டுப் பையில் வைத்துக் கொண்டு தன் வாதத்தைத் தொடர்ந்தார். நீதி மன்றம் கலைந்தது. "தந்தியில் என்ன செய்தி?" என்று நீதிபதி கேட்டார். அதற்கு படேல் எந்தவித படபடப்புமின்றி "என் மனைவி இறந்துவிட்டாள்" என்றார்.

- கே.என். மகாலிங்கம்,
பாண்டிச்சேரி

ஓட்டம்

ஒரு சமயம் சிராக்கஸ் நாட்டை எதிரிக் கப்பல்கள் முற்றுகையிட்டன. முற்றுகை நீடிக்கவே, சிராக்கஸ் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. முற்றுகையை முறியடிக்க போதிய படைபலம் இல்லாததால், மன்னன் ஆர்க்கிமிடீசை அழைத்து யோசனை கேட்டான். ஆர்க்கிமிடீஸ் உடனடியாகச் செயல்படத் தொடங்கினார்.

கடற்கரை மதில்சுவரின்மீது பெரிய லென்சுகளை எடுத்துக் கொண்டு ஏறி உட்கார்ந்தார். அந்தக்காலத்துக் கப்பல்கள் பாய்மரக்கப்பல்கள். ஆர்க்கிமிடீஸ் காலை நேரத்துச் சூரியனின் ஒளிக்கதிர்களை லென்சுகளின் வழியாக மேற்குப் பக்கத்தில் நின்ற கப்பல்களின் பாய்மரங்களின் மீது குவியச் செய்தார். சில நிமிடங்களில் பாய்மரங்கள் திடீரென்று தீப்பிடித்து எரிந்தன. எதிரிப்படைகளுக்கு எதுவுமே புரியவில்லை. ஏதோ மந்திர சக்தியால் தான் கப்பல்கள் தீப்பிடித்து எரிகின்றன என்று எண்ணி, அவர்கள் பயந்து ஓடிவிட்டனர்.



* ஆர்க்கிமிடீஸ்

- மு. பெரியசாமி,
திருவாரூர்



என்ன பயன்?

விவசாயி ஒருவர் இருந்தார். அவருக்குச் சொந்தமான தோட்டத்தில் பூச்செடிகளைப் பயிரிட்டு வந்தார். ஒரு நாள் வேகமாக அடித்த காற்றிலே ஒரு எருக்கம் விதை வந்து விழுந்து முளைத்தது.

ரோஜா, சம்பங்கி, மல்லிகை, செவ்வந்தி - இப்படி பல விதமான மலர்ச் செடிகளுக்கு மத்தியில் எருக்கஞ் செடியும் வளர ஆரம்பித்தது. அதைப் பார்த்தவர்கள் எல்லோரும், "சே! எருக்கஞ் செடி இங்கே போய் முளைச்சிருக்கே, அதை முதலில் பறித்துப் போடுங்க" என்றார்கள். மற்றச் செடிகளெல்லாம் எருக்கஞ் செடியை ரொம்ப மட்டமாக நினைக்க ஆரம்பித்தன.

வாசனைப் பூக்கள் அதைப் பார்த்து கேலியாகச் சிரித்தன.

"வாசனை இல்லாட்டி போனாலும் உனக்கு என்னை மாதிரி அழகான நிறம் கூட இல்லையே" என்று கனகாம்பரம் கூட சிரித்தது.

எருக்கஞ் செடிக்கு ரொம்ப தாழ்வுணர்ச்சி வந்து விட்டது. "நான் ஏன் பிறந்தேனோ? கடவுள் எதுக்கு என்னைப் படைச்சார்?" என்று எருக்கம் செடி அழுதது.

ஒரு நாள் விவசாயியுடன் அவர் பெண் தோட்டத்திற்கு வந்தாள். அப்போது அவள் காலில் முள் குத்தியது. அவள் அழ, விவசாயி காலில் இருந்த முள்ளை மெதுவாய் எடுத்து விட்டார்.


"எருக்கம்பால் வைச்சா முள்ளு குத்தின புண்ணு சரியாயிடும்" என்றவாறே, எருக்கம் இலையைப் பறித்து அதன் பாலை முள் குத்திய இடத்தில் தடவினார்.

"சே! என்னப்பா இதைப் போய் காலிலே வைக்கறீங்க?"

"அப்படி சொல்லாதம்மா! இதற்கு மருத்துவ குணமுண்டு. உலகத்திலே எதுவும் தாழ்ந்தது இல்லை, பிள்ளையாரே எருக்கம் பூ மாலையை விரும்பி அணிவார் தெரியுமா?"

அதைக் கேட்டுக் கொண்டிருந்த எருக்கஞ் செடி தன்னோட தாழ்வுணர்ச்சியை விட்டது.

— அருணா





செஸ் சாம்பியன்

வாகை சூட வயது தடையில்லை

ஒருமுறை 'செஸ்' விளையாட்டு சூப்பர் ஸ்டார் காரி காஸ்ப்ரோ ஜெர்மனி நாட்டிற்குச் சென்றிருந்தார். நண்பரைப் பார்க்கலாம் என்று அவர் வீட்டிற்குச் சென்ற போது நண்பர் இல்லை. வீட்டு வேலைக்காரி கட கடவென்று ஜெர்மன் மொழியில் ஐந்து நிமிடம் சொன்னது காஸ்ப்ரோவுக்கு மண்டையில் ஏறியதே தவிர அர்த்தம் விளங்கவில்லை. அப்புறம் ஜெர்மன், ரஷ்யன் இரண்டும் தெரிந்த நண்பர் ஒருவரிடம், நண்பர் வீட்டு வேலைக்காரி சொன்னதை அப்படியே ரிபீட் செய்து அர்த்தம் தெரிந்து கொண்டாரராம். ''அப்படி ஒரு கிரகிப்பு சக்தியும் புத்திக் கூர்மையும் கொண்டவர் காரி காஸ்ப்ரோ. அதில் ஐம்பது சதவீதம் எனக்கு கடவுள் கொடுத்தால் கூட போதும். கிராண்ட் மாஸ்டர் ஆகிவிடுவேன்'' என்கிறார் டி.யு. நவீன் கண்ணா. அப்பா உமாகாந்தன், அம்மா புவனேஸ்வரி, அண்ணன் கிரன் கண்ணா.



பதினான்கு வயதுக்கு கீழ் உள்ள பிரிவில் 2002ஆம் வருடம், செஸ் ஆட்டத்தில் தேசிய அளவில் முதல் பரிசு பெற்றவர் நவீன் கண்ணா. அதன் பிறகு அதே பிரிவில் போட்டியில் கலந்து கொள்ள கிரீஸ் நாட்டுக்குச் சென்று வந்தார். ''அங்கே ஹால் கிழக்கி என்ற கடற்கரையோர நகரத்தில் போட்டிகள் நடந்தன. சர்வதேச அளவில் பல ஆட்டக்காரர்களின் விளையாட்டுத் திறமையைப் பார்த்து பிரமித்துப் போனேன். கற்றுக் கொள்ள வேண்டியவை நிறையவே இருக்கின்றன'' என்கிறார் நவீன் கண்ணா. வேலம்மாள் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் பத்தாவது படிக்கிறார்.

அப்பா உமாகாந்தனுக்கு செஸ் ஆட்டம் மிகவும் பிடிக்கும். அலுவலகத்தில் நடக்கும் போட்டிகளில் கலந்து கொள்வார். மூத்த மகன் கிரண் கண்ணாவுக்கு செஸ் ஆட்டத்தில் ஆர்வம் கொள்ளச் செய்தார். அவர் நன்றாகப் பிடித்துக்





கொண்டார். பல போட்டிகளுக்குச் செல்லும் போது கிரண் கண்ணாவுடன் தம்பி நவீன் கண்ணாவும் செல்வார். போட்டிகளைப் பார்த்து, பார்த்து நவீனுக்கும்



ஆட்டம் பழக்கமாகிவிட்டது. "நான் முதன் முதலில் ஐந்து வயதாக இருக்கும்போது போட்டியில் கலந்து கொண்டேன். என் பெற்றோர் கொடுத்த ஊக்கத்தின் காரணமாகத் தான் என் திறமையை வளர்த்துக் கொள்ள முடிந்தது" என்று சொல்லும் நவீன், தேசியப் போட்டியில் வங்காளத்தைச் சேர்ந்த சௌமித்திர மஜிம்தாருடன் ஆடியதை என்றும் மறக்க முடியாது" என்கிறார்.

"அவர் ஒவ்வொரு காயை நகர்த்தும் போதும் வெற்றி தேவதை அவரைப் பார்த்து சிரித்து கொண்டிருந்தாள். இறுதியில் ஒரு தவறான வகையில் காயை நகர்த்த வெற்றி என் பக்கம் வந்து விட்டது. என்னுடைய அறுபதாவது நகர்த்தலில் வெற்றி பெற்றேன்." வீட்டில் அலமாரி நிறைய சகோதரர்கள் வாங்கிய கோப்பைகள்.

நடுத்தரக் குடும்பம் ஆனதால், மகன்களுடைய செஸ் ஆர்வத்துக்கு உதவும் வகையில் நிறைய செலவு செய்ய முடியவில்லை. போட்டிகளில் பங்கு பெற கட்ட வேண்டிய தொகை, போக்குவரத்துச் செலவு, தங்கும் செலவு என்று நிறைய உண்டு.

நவீன் கண்ணாவுக்கு கம்ப்யூட்டர் வழங்கியிருக்கிறது ராம்கோ நிறுவனம். புகழ்பெற்ற ஆட்டக்காரர்களின் ஆட்டங்களை நெட்டிலும், சி.டி.யிலும் பார்த்து திறமையை வளர்த்துக் கொள்கிறார் நவீன். இது தவிர செஸ் பற்றிய புத்தகங்களும் படிக்கிறார்.


"என்னைப் பெரிதும் உற்சாகப்படுத்துபவர்கள் என் பள்ளியின் தலைவர் முத்துராமலிங்கம், கரஸ்பாண்டண்ட் வேல் மோகன் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி வேல்முருகன். நான் கிரீஸ் சென்ற போது எனக்கான செலவை அகில இந்திய செஸ் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டது. ஆனால் என் கூட வந்த தந்தைக்கான முழுச் செலவையும் ஏற்றுக் கொண்டது என் பள்ளிதான்" என்று நன்றியுடன் சொல்கிறார் நவீன். இவருக்கு இலவசக் கல்வியும் கொடுக்கிறது பள்ளி.

"செஸ் புத்திசாலித்தனத்துக்குச் சவால் விடும் ஆட்டம். எதிராளி ஒரு காயை நகர்த்தும் போது அதற்குப் பதிலடியாக நூற்றுக்கு மேற்பட்ட வகையில் நாம் காய்களை நகர்த்த முடியும். ஒவ்வொரு போட்டியும் பாடம்தான். எப்படியும் என் 18 வயதுக்குள் கிராண்ட் மாஸ்டராக ஆகவேண்டும் என்பதே லட்சியம்" என்கிறார் நவீன். கிராண்ட் மாஸ்டர் சசிகிரனுடன் ஆடிய அனுபவமும் நவீனுக்கு உண்டு. படிப்பிலும் சோடை போவதில்லை.

செஸ் போட்டிகளில் கிளாஸிகல் என்றும் ரேபிட் (Rapid) என்றும் இரண்டு வகையான போட்டிகள் நடக்கின்றன. கிளாஸிகல் நான்கு மணி நேரம். ரேபிட் ஒன்றரை மணி நேரம். "ரேபிட் போட்டி என்பது கிரிக்கெட் ஒரு நாள் போட்டி போன்று பெரிதும் பேசப்படுகின்றது. 'செஸ்' இப்போது ஒலிம்பிக் போட்டியில் சேர்க்கப்பட்டுள்ளது. 2008ல் ஆஸ்திரேலியாவில் நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும் என்பதே என் ஆசை" என்கிறார் நவீன்.

ப்ரியன்

படங்கள்: மீடியா ராமு



தண்ணீர் ஒன்று: பலன் இரண்டு!

விவாத மேடை



ப்ரியா தண்ணீர்க் குடத்துடன் தெருவில் நடந்து கொண்டிருந்தாள். தோட்ட வேலை செய்து கொண்டிருந்த விவேக், எட்டிப் பார்த்து ப்ரியாவை அழைத்தான்.

"ப்ரியா, எங்கே குடத்தோட கிளம்பிட்டே?"

"எங்க கிணற்றுல தண்ணீர் வற்றிப் போச்சு. அதான் லாரியில் விடற தண்ணீரையாவது பிடிக்கலாம்னு போய்க்கிட்டிருக்கேன்... ஆமாம், நீ என்ன லீவுல தோட்ட வேலையெல்லாம் செய்ய ஆரம்பிச்சிட்டே?"

"எங்கம்மாகிட்டே கேளு. நான் எவ்வளவு வேலையெல்லாம் செய்யறேன்னு... சரி, சரி எங்க வீட்லயிருந்தே தண்ணீர் எடுத்துட்டுப் போ. ஏன் அவ்வளவு தூரம் நடக்கறே?"

"தேங்ஸ் விவேக். தோட்டத்தை நல்லா வெச்சிருக்கே!"

"நான் ஒரு பக்கெட் தண்ணீரை முதல்ல பிடிச்சுக்கறேன்."

விவேக் தண்ணீரைப் பக்கெட்டில் பிடித்துக் கொண்டு சென்றான்.

"ஏய் விவேக், ஓட்டை பக்கெட்டில் இப்படி தண்ணீரை ஒழுக விட்டுட்டுப் போறியே! ஏன் இப்படி வேஸ்ட் பண்ணறே?"

"உங்க வீட்ல தண்ணீர்க் கஷ்டம். அதான் கொஞ்சம் தண்ணீர் வேஸ்ட் ஆனாலும் உனக்குக் கோபம் வருது ப்ரியா."

"எங்க வீட்டுல தண்ணீர்க் கஷ்டம் இருக்கிறதாலே மட்டும் சொல்லலை. நீ வேஸ்ட் பண்ணாமல் பயன்படுத்தினின்னா உங்க வீட்டிலேயும் தண்ணீர்க் கஷ்டம் வராது இல்லையா?

"எங்க வீட்டுக் கிணறு எந்தக் காலத்திலும் வற்றாது. நீ தண்ணீர் எடுத்துட்டுப் போ."

"தண்ணீர் வற்றாமல் இருந்தால் நல்லது தான். தோட்டத்துக்கு இப்படி வெயில்ல தான் தண்ணீர் ஊத்தறதா?"

"எப்ப ஊற்றினால் என்ன ப்ரியா? எல்லாம் வேர்க்குத் தானே போகுது."

"செடிகளுக்கு காலையில் அல்லது மாலையில் தண்ணீர் ஊற்றினால் நல்லது. இந்த வெயில்ல தண்ணீர் சீக்கிரம் ஆவி ஆகிவிடும். உங்க வீட்ல பாத்திரம் கழுவற தண்ணீர், துணி துவைக்கிற தண்ணீர், குளிக்கிற தண்ணீரெல்லாம் வீணா தேங்கி நிற்குது பாரு. இப்படி தேங்கினால் கொசுத் தொல்லை வரும். நோய் வரும் வாய்ப்பும் இருக்கு. இந்தத் தண்ணீரையெல்லாம் மண்ணை வெட்டி, மரம், செடிகளுக்குத் திருப்பி விட்டீன்னாலே போதுமே! தனியாகத் தண்ணீர் ஊத்தற வேலையும் மிச்சம்; தண்ணீரும் வீணாகாது. ஒரே தண்ணீரில் இரண்டு வித பயன்! என்ன புரியுதா?"

"ப்ரியா, நீ சொன்னால் அவன் உடனே கேட்டுப்பானா? நானே இந்த யோசனையைச் செயல்படுத்தறேன். நீ தண்ணீருக்காக வெளியே அலையாதே! இங்கேயே பிடிச்சிட்டுப் போம்மா."

"தேங்ஸ் ஆன்ட்டி, வர்றேன். விவேக் சாயங்காலம் வீட்டுக்கு வா..."

தண்ணீரை எப்படி சேமிக்கலாம்? பயன்படுத்தலாம்? உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள்.

– தம்பிப்பயல்



சாபமே வரமான

"தன்மார்த்தா! உன் முகத்தில் ஏன் இந்தச் சோகம்? யாருக்கு என்ன நடந்தது?" என்று கேட்டார் புஜண்டர்.

"ஸ்வாமி! என் கடைசித் தம்பி சூரசேனன், காய், கனிகள் பறித்து வரச் சென்றான். நெடு நேரமாகியும் வரவில்லையே என்று நாங்கள் தேடிப் போனோம்..." மேலே பேச முடியாமல் விம்மினான் தன்மார்த்தன்.

அவனுக்கு இளையவன், "என்னவென்று சொல்வது? பேச்சு மூச்சில்லாமல் வாயில் நுரை தள்ளக் கிடக்கிறான். கீழே மண்ணில் 'தமையன்மார்களே! என்னைப் போல் அழகாயிருக்கிறதென்று பலாப் பழத்தைச் சாப்பிட வேண்டாம்' என்றெழுதியிருக்கிறான். நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று தொழுதான்.

புஜண்டர் அவர்களோடு சென்றார். சூரசேனனைப் பார்த்தார். அருகிலிருந்த பலா மரத்தையும் ஆராய்ந்தார். மரம் கொள்ளாத பலாக்கனிகள் பல வெடித்திருந்தன. அவற்றில் ஒன்று மஞ்சள் சுளைகளைப் பிதுக்கிக் கொண்டிருந்தது. மந்திரம் ஜெபித்து காகமாய் மாறினார். பறந்து சென்று கனியை முகர்ந்து வந்தார்.

"சீடர்களே! கவலைப்பட வேண்டாம். நாகம் ஒன்று கனியில் வாய் வைத்த சமயம் பலத்த காற்றடித்திருக்கிறது. பாம்பு பயந்து பழத்துள் விஷத்தைக் கக்கியிருக்கிறது. நஞ்சுள்ள கனியைச் சுவைத்த சூரசேனன் மூர்ச்சையுற்றிருக்கிறான். அண்ணன்களுக்கும் ஆபத்து வரக்கூடாதே என்று இப்படி எழுதி வைத்திருக்கிறான்" என்று கூறிய முனிவர், பறந்து சென்று நாகதாளி மூலிகையைப் பறித்து வந்து போட்டார்.


"மூலிகையைக் கசக்கி சூரசேனன் தேகமெங்கும் தடவ, தூங்கி விழித்தாற் போல் எழுந்தான் சூரசேனன்.

மீண்டும் மனித வடிவுக்கு மாறிய புஜண்டரை வணங்கி "தாங்கள் கூடு விட்டு கூடு பாயாமல், காகமாக மாறிய அதிசயத்தை எங்களுக்குச் சொல்ல வேண்டும்" என கேட்டுக் கொண்டனர்.

"சீடர்களே! இந்த உஜ்ஜயினியில் என் குருநாதரோடு நான் வாழ்ந்து வந்தபோது விஷ்ணு துவேஷியாக இருந்தேன். என் குரு எனக்கு எத்தனையோ புத்திமதி சொன்னார். எதையும் நான் கேட்கவில்லை.

"வைகுண்ட ஏகாதசி. என் குரு விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம் செய்தார். எனக்கு அது நாராசமாக இருந்ததால் மகாகாளேஸ்வரர் ஆலயத்துக்கு வந்து பஞ்சாட்சரம் ஜபித்துக் கொண்டிருந்தேன்.

"குருநாதர் சிவதரிசனம் செய்யாமல் சாப்பிடமாட்டார். அவரை அவமதிக்கத் திட்டம் போட்டேன். அதேபோல் அவர் வந்தார். நான் கவனிக்காதது போல் அலட்சியமாய் உட்கார்ந்திருந்தேன். ஆனால் என் குருவைப் போல் மகாகாளர் பொறுமையாயிருக்கவில்லை!



"அடே, மூடா! குருவை அவமதிக்கும் நீ மலைப்பாம்பாகி விந்திய மலைப் பொந்தில் கிடக்கக் கடவாய்" என அசரீரி ஒலித்தது. என் குரு மிகவும் நல்லவர். என் சாபத்துக்காக அவர் வேதனைப்பட்டார்.

"மகாகாளேஸ்வரா! அவன் அறியாமையால் செய்த தவறுக்கு இத்தனை பெரிய தண்டனையா? உன் நாமத்தை ஜபித்ததற்கு இதுதான் பலனா? தூஷணாசுரனை வதைத்து தர்மத்தை நிலை நாட்டியவனே! என் புண்ணியத்தை இவனுக்கு அர்ப்பணிக்கிறேன். இவனுக்கு சாப விமோசனம் கொடுக்க வேணும்" என்று பலவாறு பிரார்த்தித்தார்.

"மகாகாளர் தோன்றி, 'குருத்துவேஷி! பார்த்தாயா! எப்பேற்பட்ட குரு உனக்குக் கிடைத்திருக்கிறார்! இதற்குப் பரிகாரம் ராமஜபம் செய்வதுதான்' என அனுக்கிரகித்தார்.

"நானும் மலைப்பாம்பாய்க் கிடந்தேன். ராமஜபத்தினால் மோட்சம் பெற்று, லோமச முனிவரின் சீடனானேன். இராமரைப் பார்க்க வேண்டும் என்று அடம் பிடித்தேன்.


"லோமச முனிவர் என்ன சொல்லியும் கேட்காததால் 'காக்கையாகப் போகக்

அதிசயம்!

ஆர்.பொன்னம்மாள்

கடவது' என்று சபித்து விட்டார்.


''காகமாய் மாறி அவரை நமஸ்கரித்தேன். லோமச முனிவருக்கு சபித்து விட்டோமே என்றிருந்தது. தலையில் கை



வைத்து வாழ்த்தினார். ராமாயணத்தை போதித்தார். அதோடு 'விரும்பும்போது விரும்பிய வடிவெடுப்பாய்! விரும்பும்போது மரணம் வரும்' என்று வரமும் கொடுத்தார். பல யுகங்களைப் பார்த்து விட்டேன். என் மூச்சே ராமஜபம்தான்!


''புஜண்டனாயிருந்தவன் காகபுஜண்டனானேன். ஒருமுறை அன்னம் பொரித்த முட்டையிலிருந்து, காக்கையாய் வெளி வந்திருக்கிறேன். ஊழிக் காலத்தில் அவிட்ட நக்ஷத்திரத்தன்று ஆகாயத்தில் நட்சத்திரமாய் மாறியிருக்கிறேன். மறுபடி பிரம்மா படைக்கும்போது காகமாய் மாறி ராம நாமத்தை ஜபிப்பேன்.

''சாபமே எனக்கு வரமாகிவிட்டது. உங்களைப் போல் பலருக்கும் உதவும் பாக்கியத்தையும் ஸ்ரீராமன் எனக்களித்திருக்கிறார்'' என்றபடி காகமாக மாறிப் பறந்து சென்று விட்டார் காக புஜண்ட மகரிஷி.



உயிர் தப்பிக்க என்ன

நெட் பிட்ஸ்



முதலில் புதிர்

ஒருவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவன் எப்படி மரணம் அடைய வேண்டும் என்று தேர்ந்தெடுக்கும் வாய்ப்பும் அவனுக்கே தரப்பட்டது. அவனிடம் பின் வரும் மூன்று வாய்ப்புகள் தரப்பட்டன.

1. மூன்று மாதங்களாக ஒன்றுமே சாப்பிடாமல் கடும் பசியுடன் இருக்கும் புலிக் கூண்டினுள் தள்ளப்படுவது.
2. துப்பாக்கியால் தொடர்ந்து சுடப்படுவது.
3. விஷவாயு நிரப்பிய பாதாள அறைக்குள் அடைக்கப்படுவது.

புத்திசாலியான அவன், தேர்ந்தெடுத்த சாய்ஸ் அவனைக் காப்பாற்றி விட்டது. அவன் மேலே உள்ள மூன்றில் எதைத் தேர்ந்தெடுத்து, உயிர் பிழைத்திருப்பான் என்று உங்களால் சொல்ல முடியுமா?

ஒரு வட்டவடிவமான பாத்திரம். இன்னொன்று சதுர வடிவப் பாத்திரம். இரண்டிலும் தண்ணீர் நிரப்பப்பட்டிருக்கிறது. இரண்டில் உள்ள தண்ணீரையும் இன்னொரு பெரிய பாத்திரத்தில் ஊற்ற வேண்டும்.

விஷயம் இத்துடன் முடியவில்லை. பெரிய பாத்திரத்தில் இருப்பதில் சதுரப் பாத்திரத்தில் இருந்த தண்ணீர் எது, வட்டப் பாத்திரத்தில் இருந்த தண்ணீர் எது? என்று சரியாகப் பிரித்துச்சொல்ல வேண்டும். உங்களால் முடியுமா?

விடை: 1. மூன்று மாத கடும் பசியில் உள்ள புலிக் கூண்டைத்தான் அவன் தேர்ந்தெடுத்தான். ஏன்? மூன்று மாதம் ஒன்றுமே சாப்பிடாத புலி உயிருடன் இருக்காதே! ஆக அது காலிக் கூண்டு. அதில் ஆபத்தில்லையே!

விடை: 2. இரண்டு பாத்திரங்களில் உள்ள நீரையும் ஃபிரிட்ஜில் வைத்து பனிக்கட்டியாக்கி அதைப் பெரிய பாத்திரத்தில் போட்டு விடுங்கள். இப்போது எது எந்தப் பாத்திரத்து தண்ணீர் என்று சொல்லிவிட முடியுமில்லையா?

அடுத்து ஜோக்

ஒரு பத்திரிகை போட்டோகிராபர் ரொம்பவும் துடிப்பான இளைஞர். ஒரு நாள் பத்திரிகை அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு இருந்தபோது டெலிபோன் மணி அடித்தது. நூற்று ஐம்பது கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு நகரத்தில் உள்ள மிக உயரமான ஒரு கட்டடம், தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்டு விட்டது என்று தகவல்.

பத்திரிகை ஆசிரியரிடம் விஷயத்தைச் சொன்னதும் ''நேரத்தை வீணாக்காதே! உடனடியாக ஏர்போர்ட்டுக்குப் போ. அங்கே உனக்குப் பிரத்யேகமாக ஒரு சிறு விமானத்துக்கு ஏற்பாடு செய்கிறேன். அதில் சென்றால் சீக்கிரம் போய் சேர்ந்து, புகைப்படங்கள் எடுக்கலாம்'' என்றார்.

அவசரமாய் ஏர்போர்ட் போனார் புகைப் படக்காரர். ஒரு குட்டி விமானம் புறப்படத் தயாராக இருந்தது. கிடுகிடுவென்று ஓடிப்போய் அதில் ஏறி உட்கார்ந்து கொள்ள, அது பறக்கத் தொடங்கியது. விபத்து நடந்த இடத்துக்கு மேலாக விமானம் பறக்கத் தொடங்கியவுடன் புகைப்படக்காரர் பல்வேறு விதமாக போட்டோக்கள் எடுக்கத் தொடங்கினார்.

வழி?



"ரொம்ப தேங்ஸ். நீங்கள் மட்டும் சரியான நேரத்தில் உதவவில்லையென்றால் எங்கள் பத்திரிகைக்கு இத்தனை வித்தியாசமான படங்கள் கிடைத்திருக்காது" என்றார் விமான ஓட்டியிடம்.

விமான ஓட்டி கேட்டார், "அப்படி யென்றால் நீங்கள் விமானப் பயிற்சி தரும் புது அதிகாரி இல்லையா?"

ஒரு வீட்டில், நள்ளிரவில் திருடன் புகுந்து விட்டான். கையில் கத்தி. "சத்தம் போட்டால் குத்திடுவேன். நான் பணத்தை எடுத்துக் கொண்டு இங்கிருந்து போகிற வரை அசையக் கூடாது" என்றான்.

வீட்டுக்காரர் சொன்னார்: "உனக்குப் பணம் தானே வேணும்? வா... வீட்டில் எங்காவது பணம் இருக்கா என்று ரெண்டு பேருமா தேடிப் பார்க்கலாம். கிடைத்தால் ஆளுக்குப் பாதி எடுத்துக்கலாம்!"

சில சுவாரசியமான தகவல்கள்

* நம் கால் நகங்களை விட நான்கு மடங்கு வேகத்தில் கை விரல் நகங்கள் வளருகின்றன.
* ஒட்டகச் சிவிங்கிகளால் இரும முடியாது.
* திமிங்கிலத்தின் இதயம் ஒரு நிமிடத்துக்கு ஒன்பது முறைதான் துடிக்கும்.
* ஆங்கிலத்தில் சுமார் பத்து லட்சம் வார்த்தைகள் உள்ளன. ஜெர்மானிய மொழியில் சுமார் ஒரு லட்சத்து 80 ஆயிரம் வார்த்தைகள். ஃபிரெஞ்சு மொழியில் ஒரு லட்சம் வார்த்தை கூட இல்லை.
* கால்ஃப் பந்தினுள்ளே தேன் பயன்படுத்தப்படுகிறது.
* பச்சோந்தியின் நாக்கு அதன் உடம்பைப் போல இரு மடங்கு நீளமானது.

குட்டிக் கதை

ஒரு பௌத்தத் துறவி இருந்தார். யார் கஷ்டப்பட்டாலும் அவருக்கு மனசு தாங்காது. ஒரு நல்லவர், அவர் மக்களுக்கு உதவ பல்வேறு இடங்களுக்கும் செல்ல சௌகரியமாய் ஒரு குதிரையைக் கொடுத்தார்.

ஒரு நாள் அந்தக் குதிரையில் துறவி தனியே காட்டு வழியில் போய்க் கொண்டிருந்தபோது, வழியில் ஒருவர் வலியால் துடித்துக் கொண்டிருந்தார். அவரைத் தூக்கி, குதிரைமேல் உட்கார்த்தி வைத்து, தான் குதிரையைப் பிடித்தபடி நடந்து வந்தார் துறவி.

சிறிது தூரம் போனதும், "ஹா... ஹா... நான் உங்களை ஏமாற்றிவிட்டேன். உங்களிடமிருந்து தந்திரமாய் இந்தக் குதிரையை எடுத்துக் கொள்ளவே வலியில் துடிப்பவன் போல் நடித்தேன். இப்போது இந்தக் குதிரையை எடுத்துக் கொண்டு பறக்கப் போகிறேன். ஏமாந்து போனீர்களா?" என்றான் திருடன்.

துறவி சொன்னார், "குதிரைதானே வேணும்? எடுத்துக் கொண்டுபோ! ஆனால் தயவு செய்து, இந்த விஷயத்தை யாரிடமும் சொல்லிவிடாதே! அதைக் கேட்டுவிட்டு, யாராவது நிஜமாய் கஷ்டப்படுகிறவர்களைக்கூட, உன்னைப் போன்ற ஏமாற்றுப் பேர்வழி என நினைத்து உதவாமல் போய் விடக் கூடும். அதனால் தான் சொல்கிறேன்" என்றார்.

தன் செயலுக்கு வெட்கப்பட்டு, மன்னிப்புக் கேட்டான் திருடன்.


தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**

கொக்கரக்கோககக



முதல் பரிசு:

சு. புவனேஸ்வரி,
பதினோராம் வகுப்பு,
பாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
கோவை



இரண்டாம் பரிசு:

ரா. மரிய பாஸ்டின்,
ஒன்பதாம் வகுப்பு,
பியர்ல் அறக்கட்டளை மையம்,
பரமக்குடி, இராமநாதபுரம்

கொக்கரக்கோககக



வண்ணத் தூரிகை
முடிவு



மூன்றாம் பரிசு:
எஸ். கார்த்திக் குமரன்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசு உயர் நிலைப் பள்ளி,
உள்கோட்டை, பெரம்பலூர் மாவட்டம்

ஆறுதல் பரிசு:
மு. லாவண்யா, எட்டாம் வகுப்பு,
பியர்ல் அறக்கட்டளை மையம்,
பரமக்குடி, இராமநாதபுரம்



ஆறுதல் பரிசு:
எம். குணவதி,
திருக்கழுக்குன்றம்




ஏப்ரல் இதழில் 'கோழி - சேவல்' என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள் இங்கே...

கஞ்சன் வைத்த விருந்து!

கதை : ஆர். சாரதா

படம் : மகேஸ்




சிறிது நேரத்தில் சுந்தரம் வீட்டுக்கு வந்து நடந்த விஷயங்களைக் கேட்டறிந்தான்.
என்ன சாப்பாடும் போட்டு. 50 ரூபாயும் கொடுத்தியா? ஐம்பது ரூபாயை வாங்கிட்டு வர்றேன்...
வேண்டாங்க...
ராமசாமி... ராமசாமி
நீங்க இருங்க, நான் பார்க்கறேன்.
ஐயோ, சுந்தரம் எதுக்கு இப்படி கத்தறான்?
வெளியில் வந்த ராமசாமி மனைவி -
என்னங்க?
என் வீட்ல சாப்பிட்டதுமில்லாமல் 50 ரூபாயும் வாங்கிட்டு வந்துட்டான். அதைக் கொடு.
என் கணவரை சாப்பிடக் கூப்பிட்டு, விஷம் வச்சிட்டீங்க. மருத்துவ செலவுக்கு இருநூறு ரூபாய் தாங்க. இல்லைன்னா பஞ்சாயத்துக்குப் போயிடுவேன்.
பஞ்சாயத்தா? வேண்டாம்... இந்தா 200 ரூபாய்...
கஞ்சன் சுந்தரம் புலம்பியபடியே வீட்டை அடைந்தான்.


FREE WITH EVERY COPY
A BLOW-UP
POSTER OF
THE VICTORIOUS
INDIAN TEAM
A
HOLIDAY
BONANZA!
CRICKET
SPECIAL
GOKULAM
The magazine for children
MAY 2004 Rs.8/-
BOOK
YOUR COPY
TODAY
For Subscriptions mail to : Gokulam, Kalki Buildings,
47 NP Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai-600 097
E-mail:subscription@kalkiweekly.com

மூன்று கற்கள்

செண்பகக் காட்டில் சாது ஒருவர் வசித்து வந்தார். அவர் எப்போதும் தம்முடன் மூன்று கற்களை வைத்திருந்தார்.


தூங்கும்போது ஒன்றைத் தலையின் கீழும், ஒன்றை இடுப்பின் கீழும், மூன்றாவதைக் காலின் கீழும் வைத்துக் கொண்டும், தன் உடம்பைத் தகடால் மூடிக் கொண்டும் தூங்குவார்.

மழை பெய்யும்போது கல் மீது அவர் உடம்பிருக்கும், தண்ணீர் அடியில் செல்லும். அவர் தூக்கமும் கெடாது. உட்காரும் போது மூன்று கற்களையும் ஒரு சேர வைத்துக் கொண்டு அதன் மீது உட்காருவார். அதனால் பாம்பு போன்றவை அவரைத் தொந்தரவு செய்யாமல் நகர்ந்து செல்லும்.

யாராவது உணவு கொண்டு வந்தால் அவர் உட்கொள்வார். இப்படிதான் அவர் வாழ்ந்து வந்தார்.

ஒருநாள், காட்டிற்கு வந்த அரசன் இதைக் கண்டு பரிதாபப்பட்டான். 'ஐயோ, பாவம்! கல்லின் மீது உடம்பை வைத்துக் கொண்டு தூங்குகிறாரே. இவர் என்ன பாடுபடுவார்? இவரை அரண்மனைக்கு அழைத்துச் சென்று இரண்டு அல்லது மூன்று நாட்களாவது சுகமாக இருக்கச் செய்ய வேண்டும்' என நினைத்தான்.


அரசன் அரண்மனை திரும்பியதும்



சாதுவை அழைத்து வருவதற்கு இரண்டு வீரர்களையும், ஒரு பல்லக்கையும் அனுப்பி வைத்தான். வீரர்கள் சாதுவைச் சந்தித்து மன்னனின் வேண்டுகோளைத் தெரிவித்தார்கள்.

முதலில் மறுத்த சாது, பின்பு ஒப்புக் கொண்டார். தமது தகடு, மூன்று கற்கள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். ''அரண்மனைக்குச் செல்பவர் எதற்காக இவற்றை எடுத்துக் கொள்கிறார்?'' என வீரர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். பல்லக்கில் ஏறி சாது அரண்மனையை அடைந்தார்.

அரண்மனையில் சாதுவிற்குத் தங்கக் கட்டிலும், பட்டு மெத்தையும் தரப்பட்டன. அந்த மெத்தையின் மீது மூன்று கற்களை வைத்தார். தன் மீது தகட்டைப் பரப்பிக் கொண்டு உறங்கினார்.



மறுநாள், அரசன் வந்தான். ''சுவாமி, எல்லாம் சரியாக இருந்ததா? ஏதாவது வேண்டுமா?'' எனக் கேட்டான்.

''ஒரு குறையும் இல்லை'' என்றார் சாது.

''அது இல்லை சுவாமி, காட்டில் கல்மீது கஷ்டப்பட்டு உறங்கிக் கொண்டிருந்தீர்கள். இங்கு இந்த மெத்தை எல்லாம் வசதியாக இருக்குமே. அதனால்தான் கேட்டேன்'' என்றான் அரசன்.

சாது, ''அங்கிருந்த படுக்கையேதான் இங்கேயும். இங்கிருப்பதே அங்கேயும். எல்லா இடத்திலும் எனக்கு ஒரே மகிழ்ச்சிதான். எனக்குத் தேவையும் எதுவும் இல்லை, குறையும் ஒன்றும் இல்லை'' என்று பதிலளித்தார்.

திகைத்த அரசன் கட்டிலை நோக்கினான். கட்டிலின் மீது மூன்று கற்கள் இருந்தன! சாதுவின் காலடியில் விழுந்தான். ''நீங்கள் ஒரு மகாத்மா, உங்கள் பெருமையை அறியாமல், நீங்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று உங்களை நான் இங்கே அழைத்து வந்தேன். நீங்களோ எப்போதும் ஆனந்தமாக இருப்பவர், என் முட்டாள்தனத்தை மன்னித்து விடுங்கள்'' என்று வேண்டி நின்றான். சாது அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

- இல. கலைவாணி,
அம்பலவாணன்பேட்டை.

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

மார்ச் மாதம் வெளிவந்த போட்டியில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். சரியான விடையளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.


சரியான விடை:

1. கான்பெர்ரா 2. சிட்னி, மெல்பர்ன் 3. ஆங்கிலம் 4. ஆஸ்திரேலியன் டாலர் 5. கம்பளி 6. சீனா

பரிசு பெற்றவர்கள்:

1. வெ. சங்கிலி பூதத்தான், எட்டாம் வகுப்பு, இந்து நடுநிலைப் பள்ளி, காருகுறிச்சி, நெல்லை மாவட்டம்.
2. எஸ். துளசிநாத மூர்த்தி, ஒன்பதாம் வகுப்பு, ஜேஜிவிவி பள்ளி, அண்ணாநகர், சென்னை.
3. பி. யுவகீர்த்தி, ஏழாம் வகுப்பு, மான்ட்போர்ட் பள்ளி, திண்டிவனம்.
4. வெ. நீலகண்டன், ஆறாம் வகுப்பு, நாகமணி அம்மாள் நினைவு மேல் நிலைப்பள்ளி, கம்பம்.
5. எஸ். கார்த்திக், பதினோராம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, உட்கோட்டை, பெரம்பலூர் மாவட்டம்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.



மை பேனாவே சிறந்தது!

எங்கள் எண்ணங்கள்...

சிக்கனம் வாழ்கைக்கு அவசியம்தான். அதற்காக இப்படி சிக்கனம் செய்தால், பிற்காலத்தில் மரங்கள் வளராமல், மழை வராமல் பெரும் இழப்பை சந்திக்க வேண்டிய நிலை வரும். நம் சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாப்பது நம் கடமை. அதனால் கூடுமானவரை இப்பேனாக்களைத் தவிர்ப்பதே நலம்.

- டி.ஆர். பாலாஜி,
மதுரை

ஒன்ஸ் யூஸ் பேனாக்களால் பூமியே நாசமடைகிறது எனில், இம்மாதிரி பேனாக்களைத் தயாரிக்கவே தடை போடலாம்! மேலும் அடிக்கடி ரீபில் மாற்றி பொருள் இழப்பு ஏற்படாத வண்ணம் 'இங்க் பேனாக்களை' உபயோகித்தால் சிக்கனத்திற்கு சிக்கனமும் ஆச்சு; இதனால் பூமிக்கும் எவ்வித மட்காத பொருள்களால் ஏற்படும் தூய்மைக் குறைவு என்பதும் இல்லை.

- கே. கணேசன்,
நான்காம் வகுப்பு,
ஊ.ஒ.தொ.பள்ளி,
கூத்தனூர், புதுக்கோட்டை

பொதுத்தேர்வு எழுதும் மாணவர்கள் அனைவரும் மை பேனாவைப் பயன்படுத்த வேண்டும் என்று கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதுபோல அனைத்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களும் மை பேனாவைப் பயன்படுத்தினால் அந்தப் பேனாவைப் பல நாட்கள் மட்டும் அல்ல பல வருடங்கள் வைத்துக் கொள்ளலாம். எனவே சிக்கனமாகவும் இருக்கலாம். அதே சமயத்தில் தூய்மையாகவும் இருக்கும் அல்லவா?

- வே. சுபஸ்ரீ,
பதினோராம் வகுப்பு,
அ.மே.நி. பள்ளி, நல்லூர்

ஒரு வருடத்திற்கு ஒரு பேனாவில் 24 ரீபில்கள் மாற்றி உபயோகித்தாலும், 24 யூஸ் அண்டு த்ரோ பேனாவை உபயோகித்தாலும் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏறக்குறைய ஒன்றுதான்.


காரணம் ஒரு பேனாவில் 24 ரீபில்கள் மாற்றினால், அந்தக் காலியான 24 ரீபில்கள் மட்காது. அதேபோல தான் யூஸ் அண்டு த்ரோ பேனாவும்.

எனவே, ரீபில் பேனா உபயோகிப்பதை விட, மை பேனாவை உபயோகிப்பதே சாலச் சிறந்தது.

அதனால் சுற்றுச் சூழலும் கெடாது. கையெழுத்தும் அழகாக (ரீபில் பேனாவில் எழுதுவதை விட) இருக்கும்.

- எம். வினோத்,
சங்கரன்கோவில்





வரலாற்று வெற்றிகள்!

விளையாட்டு உலகம்

இந்திய கிரிக்கெட் அணிக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கும் இடையே பாகிஸ்தானில் ஒரு தினப் போட்டிகள் நடந்து முடிந்து விட்டன. இரு அணிகளும் தலா இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று சம நிலையில் இருந்த நிலையில் ஐந்தாவது ஒரு தினப் போட்டி அதிகப் பரபரப்பாகி விட்டது. முதலில் களமிறங்கிய இந்திய அணி 293 ரன்களைக் குவித்தது. பாகிஸ்தான் அணி 253 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதன் மூலம் இந்திய அணி பாகிஸ்தானை அதன் சொந்த மண்ணிலேயே தோற்கடித்து வரலாற்று சாதனை படைத்து விட்டது. 107 ரன்களைக் குவித்த லக்ஷ்மண் ஆட்ட நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாகிஸ்தானின் கேப்டன் இன்சமாம் உல் ஹக் தொடர் நாயகன் பரிசை வென்றார். இர்ஃபான் பதான், பாலாஜியின் பந்து வீச்சு இறுதிப் போட்டியில் சிறப்பாக அமைந்தது. இருவரும் தலா மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.



சேவாக்



• மகிழ்ச்சியில் இந்திய வீரர்கள்

மூன்று டெஸ்ட் போட்டி கொண்ட தொடரின் முதல் போட்டி பாகிஸ்தானில் உள்ள முல்தானில் ஆரம்பித்தது. முதல் இன்னிங்ஸில் வீரேந்தர் சேவாக் மூன்று சதங்களை அடித்தார். 72 ஆண்டு கால இந்திய கிரிக்கெட் சரித்திரத்தில் இது புது மைல் கல்லாக அமைந்துள்ளது. 1989 - 90ல் சஞ்சய் மஞ்ச்ரேக்கர் 218 ரன்களைக் குவித்தது, பாகிஸ்தானுக்கு எதிரான இதுவரையிலான அதிகபட்ச ஸ்கோராக இருந்தது. அது தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது. இதே இன்னிங்ஸில் சச்சின் டெண்டுல்கர் 194 ரன்களைக் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்திய அணி 675 ரன்களை எடுத்து ஆட்டத்தை முடித்துக் கொண்டதாக அறிவித்தது. தொடர்ந்து ஆடிய பாகிஸ்தான் மளமள வென்று விக்கெட்டுகளை இழந்தது. எனவே அடுத்த இன்னிங்ஸையும் அவர்களே தொடர்ந்து ஆடினர். 216 ரன்களில் பாகிஸ்தான் சுருண்டது. ஓர் இன்னிங்ஸ் 52 ரன்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தியது இந்திய அணி. இதுவும் ஒரு வரலாற்று சாதனையே! 1952ஆம் ஆண்டு முதல் பாகிஸ்தானுடன் ஆடி வரும் இந்திய அணி பாகிஸ்தானில் இதற்கு முன்னர் ஒரு டெஸ்டிலும் வென்றதில்லை. சேவாக் ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார். ஒரு தினப் போட்டிகளை வென்ற இந்திய அணி டெஸ்ட் தொடரையும் கைப்பற்றும் என்று எதிர்பார்ப்போம்.


70 மெய்மறக்கும் சுவையுடன் கோடை விடுமுறையை கொண்டாடுங்கள்.
VANILLA
சுட்டிக் குழந்தைகளே !
அருண் ஐஸ்க்ரீமின் விதவிதமான சுவைகளுடன் சம்மர் லீவை
என்ஜாய் பண்ணுங்க !
70
மெய்மறக்கும் சுவைகள்
All New
Arun
ICECREAMS